# இடைக்காடு
# அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள்



# கும்பாபிஷேக சிறப்பு மலர்

03-06-1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

அருள்மிகு

# இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள்

## கும்பாபிஷேக மலர்

**08 - 06 - 1989**

ஷ்டி ஆலய பரிபாலன சபை வெளியீடு

மஹாத்மா அச்சகம்,
ஏழாலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை

# இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

மூலமூர்த்தம் : புவனேஸ்வரி அம்பாள்

தலம் : நல்லிகப்பன் வயல்

தீர்த்தம் : திருக்குளம்

விருட்சம் : அரசு, வேம்பு (சிவன் - சக்தி)

## பரிவார மூர்த்தங்கள்

விநாயகர்

சந்தானகோபாலர்

கண்ணகி அம்மன்

ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர்

நவக்கிரக நாயகர்கள்

கொடித்தம்ப பிள்ளையார்

நாகதம்பிரான்

பைரவர்

சண்டேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

சைவ அருட்பெருந் தகையீர்!

அன்னையின் தயைக்கும் அன்புக்கும் அவனியில் இணை ஏது. சக்தி இன்றேல் சிவம்இல்லை. அவளை ஆயிரம் திருநாமங்களினுல் பூஜித்தாலும் பராசக்தி ஒருவளே. நாம் செய்யும் பிழைகளை எல்லாம் பொறுத்து அருள் பாலிப்பவள் கருணும் பிகையே. இஷ்டதெய்வமாக, உபாசனு மூர்த்தியாக ஒவ்வொருவருக்கும் ஒரு தெய்வத்தின்பால் பக்திப் பிரேமை மிகுந்தெழும். அத்தெய்வத்தின் திருவடிகளை ஒருமையுடன் இறுகப் பற்றிக் கொண்டால் வேண்டியன வெல்லாம் சித்திக்கும். இது சொல்லால், எழுத்தால் விளங்க வைப்ப தொன்றன்று அநுபவமூலமாக உணர வேண்டியது இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் நிகழவிருப்பதையறிந்து பெருமகிழ்ச்சி. நாம் அம்பாளுக்கு எடுக்கும் விழாக்கள் கைங்கரியங்கள் எல்லாம் சிறந்தவை என்று சொல்லவும் வேண்டுமோ. குறைந்தது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருக்கால் எடுக்கப் படும் இக்குடமுழுக்கு என்னும் பெருவிழா தவமுடையார்க்கே காணக் கிடைக்கும் திருக்காட்சியாகும்; இவ்விழா யாதாயினுமொரு குறைவின்றிச் செவ்வனே நிறைவுற எல்லா வகையாலும் தொண்டுகள் புரிந்த அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம். அவர்களுக்குத் தேவியின் திருவருள் நிறையப் பெருகும் என வாழ்த்தி எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

# இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் அறிக்கை

எல்லாம் வல்ல எம்அன்னை புவனேஸ்வரியின் பூரணகிருபா கடாட்சம் என்றும் துணை நிற்க. ஷ ஆலய மரபுவழித் தருமகர்த்தா திருவாளர் சு.ஞானசபேசன் அவர்கள். அவர் தமக்குரிய ஆலயத்தின் சகல நிருவாகப் பொறுப்புரிமைகளையும் 1982ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02ந் திகதி இந்த ஆலயபரிபாலன சபையிடம் சாசனமூலம் கையளித்தார். சபை பொறுப்புணர்வோடும் நல்லெண்ணத்தோடும் கையேற்றது.

இச்சபை முற்றுமுழுதாக ஊர்ப் பொதுமக்களை அங்கத்தவர்களாகக் கொண்டமையால் எல்லா மக்களின் பூரண ஒத்துழைப்புடன் சிறந்த முறையில் பணியாற்றி வருவதாயிற்று. சபை, தலைவர் பொருளாளர் செயலாளர் ஆகிய மூவருடன், பத்துத் திருவிழா உபயகார முக்கியஸ்தர் பதின்மரும் இடைக்காடு மகாவித்தியாலய அதிபரும், இடைக்காடு ச. ச. நிலையம், கலைமகள் சனசமூக நிலையங்களின் தலைவர்கள் இருவரும், பூசகர், ஆலய பாதுகாவலர் ஆகியோரையும் உறுப்பினராகக் கொண்டது.

நிருவாகப் பொறுப்பைச் சபைஏற்றபின், இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய வழிபாடுகள் கிரமந்தவறாது ஒழுங்காக நடக்க வழி அமைத்தது. மேலும், உற்சவங்கள் மாத பூசைகள் மற்றுமுள்ளவைகளை ஊர்மக்கள் யாவருக்கும் பகிர்ந்தளித்து, யாவருக்கும் உரிமை உணர்வை வளர்த்தது.

தைமாதப்பிறப்பு, தைப்பூசம், மாசிமகம், மகாசிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு சித்திரைப்பூரணை, அர்த்தநாரீசுரர்தினம், ஆனிஉத்தரம்,ஆடிப்பூரம், ஆடிஅமாவாசை, நவராத்திரி கார்த்திகைத்தீபம், திருவெம்பாவை என்பன விசேட அபிஷேக பூசை ஆராதனைகளுடன் கொண்டாடப்படுகின்றன.

ஆலய மூலமூர்த்தியாகிய புவனேஸ்வரி அம்பாளுக்கு மகோற்சவம் சித்திரைத் திங்கள் வளர்பக்கத்து ஆறும் திதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்துச் சித்திரா பூரணையில் தீர்த்தோற்சவத்தோடு நிறைவுபெறும். தீர்த்தத்திருநாளின் இரவு அம்பாள் திருவூஞ்சல் பாடி ஊஞ்சல் ஆட்டுவது மிகச்சிறப்பான நிகழ்ச்சி.

புதிதாக நிருவாகப் பொறுப்பை ஏற்ற இப் பரிபாலனசபையின் கன்னிமுயற்சியாகச் சிலதிருப்பணி வேலைகளையும் நிறைவேற்றியது. அவை (1) உள்வீதி (முதலாம்வீதியை) விஸ்தரித்துச் சுற்றுமதில் அமைத்தது. (2)ஆலயத்திற்கு அசையாமணி அமைத்து வைத்தது. (3)வசந்த மண்டபம் புனர்நிர்மாணம் செய்தது (4) மடைப்பள்ளி, வாகனசாலை என்பன புதுப்பித்துத் திருத்தியமைத்தது. (5)புதிதாக மின்சார இணைப்புச் செய்தமை என்பன.

கண்ணகை அம்பாளுக்கு வைகாசித் திங்களில், வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலய விசாகப் பொங்கலுக்கு முந்திய திங்கட்கிழமையில் ஆண்டுதோறும் பொங்கல்விழா எடுக்கின்றோம். அன்றையதினம் கண்ணகை அம்பாளை அலங்கரித்துத் திருவுலா எழுந்தருளுவித்த பின், திருவூஞ்சல்பாடி ஊஞ்சலாட்டுவதும் நியமமாக நிகழ்த்துகின்றோம். கண்ணகை அம்பாளுக்கும் தனியான திருவூஞ்சற் பதிகம் உள்ளது.

பக்தவத்சலை ஆகிய எங்கள் அன்னை அண்மையில் நடந்த அசம்பாவிதங்கள், அநர்த்தங்கள், அனைத்தையும்தானே ஏற்றுக்கொண்டு, மக்களாகிய எங்கள் உயிர் உடைமைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்குப் பெரும்பாதிப்பு உண்டாகாமற் காத்தருளி தான், தயாபரி என்பதை உணரவைத் தாள். அதனால் இவ்வாலயத்துக்கும் மூர்த்திகளுக்கும் பல ஊனங்கள் ஊறுகள் ஏற்பட்டன. ஊனமானவற்றைப் புனரமைப்புச் செய்ய வேண்டியதாலும், பரிவார மூர்த்திகளும் அவர் களுக்கு ஆலயங்களும் புதிதாக அமைக்க அவாவுற்றதாலும் 08-09-1987ல் பாலஸ்தாபனம் செய்து திருப்பணியை ஆரம்பித்தோம்.

புதிதாக ஆரம்பித்து நிறைவேற்றிய திருப்பணிகளாவன (1)விநாயகர் ஆலயம் (2)ஸ்ரீ வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர் ஆலயம் (3) நாகதம்பிரான் ஆலயம் (4) நவக்கிரக நாயகர் ஆலயம் (5)சண்டீஸ்வரி ஆலயம் ஆகிய பரிவார மூர்த்திகள் ஆலயமும் நூதன மாக அவ்வம் மூர்த்திகளும் நிருமாணிக்கப் பெற்றன.

6. சேதமுற்ற சந்தான கோபாலருக்குப் புதிய விக்கிரகம்.

7. கண்ணகிக்குப் புதிதாகச் சிலாவிக்கிரம்.

8. மறைந்த புவனேஸ்வரி அம்பாள் தாமிரவிக்கிரகத்திற்குப் புதிய எழுந்தருளி விக்கிரகம் என்பன உருவாக்கப் பெற்றன.

9. செல் தாக்குதலால் சேதமடைந்த ஆலயத்தின் பகுதிகளெல்லாம் திருத்திச் செம்மை செய்து வர்ணந்தீட்டி மெருகூட்டிப் புதுக்கோயிலாக்கப் பெற்றது.

10 தம்பப்பிள்ளையாரும் புதிதாகத் ஸ்தாபனஞ் செய்யப் பெற்றது.

11. எல்லா மூலஆலயத்து உட்சுவர்களுக்கும் பளிங்குக்கல் பதிக்கப்பட்டுள்ளன.

12. மின்னிணைப்பும் விஸ்தரித்துச் சீர்ப்படுத்தப்பட்டுள்ளது.

13. உள்வீதியின் ஒருபகுதி சீமேந்துத் தரையாக்கப்பட்டுள்ளது.

14. வெளிமண்டபமும் சீமெந்து நிலமாக்கப்பட்டுள்ளது.

15. தெற்குப்பக்க மதில் விஸ்தரித்துப் புதிதாக நிறுவப்பெற்றது.

16. நவீன முறையில் மடைப்பள்ளி அமைத்ததோடு குருக்களுக்கெனத் தனியோர் அறையும் உருவாக்கப்பட்டுள்ளது.

17. பிரதான வீதியிலிருந்து ஆலயத்துக்கு வரவுள்ளவீதி(தெரு) நன்கு போக்குவரத்து செய் யக் கூடியதாகச் செப்பனிடப்பட்டது.

18. ஆலயத்திற்கென ஒலிபெருக்கி ஒன்றும், மின்சாரயந்திரமும்(ஜெனறேற்றர்) புதிதாகப் பெறப்பட்டுள்ளன.

19. வசந்தமண்டபம் மேலும் புதுப்பொலிவு பெறும் பொருட்டு, அதற்கு ஓவியம்] தீட்டி வர்ணம் பூசி, அம்பாள், பால விநாயகர், பால முருகன் திருக்காட்சி தரும் திரைச் சீலை யும் பஞ்சவர்ண ஒளியும் அமைக்கப்பட்டது. (''நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண் ணோர்கள் ஏத்த'' என்ற மணிவாசகரின் வாக்குக்கமைய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூல மூர்த்தியாகிய புவனேஸ்வரி அம்பாள்



அலங்கரிக்கப்பட்ட மூலமூர்த்தியாகிய அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இலட்ச ரூபா செலவான இத்திருப்பணிகளை இச்சபை நிறைவாக்க உதவிய காரணிகள் முதலாவதாக அம்பிகையின் திருவருள் நிதியெனலாம். அடுத்து நம்மூர் மக்களும் அயலூர் மக்களும் வேண்டும்போதெல்லாம் நான்முந்தி நான்முந்தி என்று முன்வந்து நல்கிய நன்கொடைகள். இதன்மேலும் வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் எமது உற்றார் உறவினர் ஊரவர் என்றுள்ள பலதிறத்தினரும் வாரிவழங்கிய பெருநிதி. நிதியேயன்றி பல்வேறு பொருளுதவி சரீரஉதவி(சிரமதானம்) ஊர்திகளின் உதவி என்பனவும் தாராளமாக வந்தமை.

எங்கள் கிராமத்து மகாவித்தியாலயம், சனசமூகநிலையம், இந்து நெறிக்கழகம் என்பனவும் மற்றும் பலபொது ஸ்தாபனங்களும் ஸ்தாபனரீதியில் பேருதவி புரிந்தன. எங்கள் கிராம மக்களுடன் அயற்கிராம மக்களும் பலஆலய நிர்வாகங்களில் உள்ள அநுபவஸ்தர்களும் இத்திருப்பணிகளை நிறைவாக்குவதற்கு வேண்டிய புத்திமதிகளும் மற்றும் உதவிகளும் மனமுவந்து செய்தனர்.

ஆலயநிர்மாணப் பொறுப்பை ஏற்ற ஸ்தபதியரும் பண்டிகை விக்கிரகம் அமைத்தோரும் வர்ணந் தீட்டியோரும் புதியமூல மூர்த்திகள் எழுந்தருளி மூர்த்திகளை உருவாக்கிய சிற்பிகளும், மற்றும் பலதுறைப் பணிகளை ஆற்றியவரும் ஆகிய யாவருமே உரியகாலங்களில் தத்தங் கடமைகளை வழுவின்றிச் செய்து தங்கள் கைவண்ணத்தைக் காட்டினர். இவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி கௌரவித்துள்ளோம்.

இங்ஙனம் பலதுறையிலும் திருப்பணிக்குத் தொண்டாற்றிய சிவபுண்ணிய சீலர்களாகிய சீரியர் யாவரதும் திருவடிகளுக்கு வணக்கம் செலுத்தி நன்றி கூறவேண்டியது சிறியேனது பாரிய பொறுப்பாகும். அனைவரையும் "திருப்பணியில் சேர்ந்துழைத்தார் அடியார்க்கும் அடியேன்" என இப்பரிபாலனசபையின் சார்பாக வாழ்த்தி வணங்குகிறேன்.

எல்லோரதும் நல்லாதரவால் 08 – 06 – 1989ந் திகதி வியாழக்கிழமை மஹாகும்பாபிஷேகம் (பெருஞ்சாந்திவிழா) நிறைவாக நடந்தது. தொடர்ந்து ஒரு மண்டலகாலம் (45நாள்)மண்டலாபிஷேகம் நடைபெறுகிறது. மண்டலாபிஷேக நிறைவில் சங்காபிஷேகம் சிறப்பாக நிகழும்.

மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கு ஏதுவாகவே முற்றிலும் தெய்வீகத் தொடர்புடைய நிகழ்ச்சிகளையும் தொண்டு நெறியையும் தொடர்ந்து அநுசரிக்கும் வகையிலே ஆலய வழிபாட்டு முறையை வளர்க்க ஆவன செய்கிறோம். ஆலயத்தில் கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு இடமளிப்பதில்லை. மக்களும் அதை வரவேற்று நிற்கின்றனர். தினமும் முற்பகலில் அபிஷேகம் பூசை ஆராதனைகள் பிற்பகலில் கூட்டுப் பிரார்த்தனை பிள்ளைகள் பெற்றோர் கூடியிருந்து திருமுறை முதலான துதிப்பாடல்களைப் பாடுகிறார்கள். அடுத்து அறிஞர்களை அழைத்து அறவுரை, அருளுரை வழங்கச் செய்தல், அதன்மேல் விசேடபூசையும் அம்பாள் திருவுலா வருதலும் என்ற இக்கிரமத்தில் மக்கள் பக்தி சிரத்தையோடும் விரத நியமத்தோடும் இருவேளையிலும் வந்து வழிபட்டு அருள் பெற்று மனநிறைவு பெறுகின்றனர்.

சைவசமய நியமப்படி சிவதீட்சை பெற்றவர்களே சைவர் ஆவர். அவர்களே சிவதொண்டு செய்யும் தகுதி பெற்றவராவர் என்பதால் மண்டலாபிஷேக காலத்தில் நன்னாளில் நல்லாசாரியர் மூலம் இளைஞரும் முதியரும் ஆகிய ஐஞ்ஞூற்றுவருக்குச் சமயதீட்சை வழங்கப்பட்டது. அதன்பின் அவர்கள் ஆசார சீலத்தோடு தினமும் அநுட்டானம் செய்து சைவத் திருக்கோலத்தோடு வழிபட வருகின்றனர்.

இதற்கு உறுதுணையாக இடைக்காடு இந்து நெறிக் கழகம் சைவ அனுட்டான விதி என்னும் நூலையும் விபூதி பக்கட்டையும் இலவசமாக வழங்கியுள்ளது.

சிறப்பாகப் பெண்களுக்குத் திருவிளக்குப் பூசையின் பெரும்பயனையும் வழிபாட்டுமுறையையும் விளக்கி அவர்கள் அப்பூசையில் ஈடுபட்டுப் பயன்பெறச் செய்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளக்கு வழிபாட்டு முறைகளை விளக்கும் பொருட்டு இந்து நெறிக் கழகம் திருவிளக்கு வழிபாட்டில் பங்குபற்றிய 180 பக்தர்களுக்கு 18-06-89 அன்று திருவிளக்கு வழிபாட்டுப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்தது.

இவற்றுக்கு உபகாரமாக, சைவஅநுட்டான விதி, திருவிளக்கு வழிபாடு, நவக்கிரக தோத்திரம், அபிராமி அந்தாதி ஆகிய நூல்களை அச்சிட்டு மலிவுவிலையில் கொடுத்து இந்து நெறிக்கழகம் உதவுகிறது.

மாணவர்கள் எல்லாருமே அம்மை துதிபாடும் செம்மை நெறிநிற்றற் பொருட்டு அபிராமி அந்தாதி நூற்றிரண்டு பாடல்களையும் மனனஞ் செய்வித்தற்கு ஏற்ப மனனப் போட்டி நடத்துகிறோம். சைவநெறியில் வாழும் வழியறிதற் பொருட்டுச் சைவவினா விடையிலும் போட்டிப் பரீட்சை நடத்துகின்றோம்.

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பதாலே வெறுங்கல்வி அறிவுமாத்திரம் அமைந்தால் போதாது, சிவத்தொண்டு செயல் முறையிலும் வரும்போதுதான் பூரணமான நிறைவு அடையும் என்பதை அறிவோம்.

எனவே நாம் ''தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற அப்பர் வாக்கையும் பொருளையும் மக்கள் மனதிலே தெளிவாக உணரச் செய்கின்றோம். அதன்பயனாக மக்கள் நாடோறும் ஆலயத்தில் வந்து திருவலகிடுதல் (கூட்டுதல்) திருமெழுக்கிடுதல்(கழுவுதல்), மலர் கொய்தல், மாலைகள் கட்டிக் கொடுத்தல் மற்றும் பல பூசைக்குரிய பொருள்களைச் சேகரித்துக் கொடுத்தலாகிய சரியைத் தொண்டுகளை மனமுவந்து செய்கின்றார்கள். இத்தொண்டின் காரணமாக என்றும் இக்கோயில் புதுக்கோயில் பூங்கோயில் எனப் பொலிகின்றது. இந்தப் பூக்களுக்கும் மாலைகளுமே பூசைக்கும் அலங்காரத்துக்கும் கண்டு மிகையாகவும் இருக்கின்றது. தவமும் தவம் உடையாருக்கே ஆகும் என்றபடி இவர்கள் செய்த பூர்வபுண்ணியமே இப்போது இந்தச் சிவபுண்ணியத்தைச் செய்ய வைத்திருக்கின்றது. இவர்கள் யாவரும் தவச்செல்வராய் தழைப்பாராக. தாங்கள் சமைத்த மாலைகள் அம்பிகைக்குச் சாத்தப்பட்டு எவ்விடத்தில் இருந்து எவ்வாறு அழகு செய்கிறது என்பதையே பார்க்கும் கருத்தோடு இருப்பதால் இவர்கள் தியானமறாத சிந்தையோடு தரிசனபலனும் பெறுகின்றார்கள். ஆகவே எதிர்காலச் சிற்பிகளான எமது இளஞ்சந்ததியினர் நல்லதோர் எதிர்காலத்தைக் காண்பர் என்பதில் சந்தேகமில்லை.

முன்னமே நன்றி கூறியவர்களோடு இந்தக் கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் ஆகியவற்றை வேதாகம நெறியிலே சிறப்பாக நடத்தி இவ்வாலயத்திலே தெய்வ சாந்நித்தியத்தை நிறுவிய பிரதம ஆசாரியர் மற்றும் ஆசாரியர்கள் உதவியாளர்கள் மற்றும் யாவருக்கும்நன்றி கூறி வணங்குகின்றேன்.

இவ்வூர் மக்களேயன்றி அனைவருமே தந்தை ,தாய், குரு, தெய்வம், தேசம் என்பவற்றில் பத்தி பூண்டவர்களாய் வளர்ந்து இவ்வுலகம் நிலைபெறுவதற்கேதுவான பண்பாளர்களாகப் பரிணமிக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன். அதற்கு என்றென்றும் எம் அன்னை புவனேஸ்வரி அருள் புரிவாராக.

வே. சுவாமிநாதன்
தலைவர்



பரிவார மூர்த்தியாகிய
ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர்



உற்சவ மூர்த்தியாகிய
புவனேஸ்வரி அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குடமுழுக்குத் தரிசனம் கோடிபுண்ணியம்

அகிலாண்ட கோடியீன்ற அன்னையின் ஒரு நாமம் புவனேஸ்வரி என்பதாகும். புவனங்கள் அனைத்துக்கும் ஈஸ்வரியாக நின்று இரட்சிப்பவள் அம்பாள். அவளுடைய அருளாட்சி நடைபெறாத இடமே கிடையாது. வெற்றியும் வீரமும், சித்தியும் சிறப்பும், வாழ்வும் வளமும் சகல மங்கள சுபமும் தேவியின் கருணையினாலே எமக்குக் கிடைக்கின்றது. நிலத்தின் பொறையும், நீரின் தண்மையும், நெருப்பின் வெப்பும், காற்றின் அசைவும், ஆகாயத்தின் விளக்கமும் அன்னையின் ஆணையின் படியே நமக்குக் கிடைக்கிறது.

> "பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர் விசும்பும்
> ஊரும் முருகு சுவை ஒளி ஊறு ஒலி ஒன்றுபடச்
> சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
> சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே"

என்று பாடினார் அபிராமிப்பட்டர். எனவே எமது வாழ்வோடு இணைந்த ஒரு வழிபாடாக அம்பாள் வழிபாட்டை அமைத்து வந்துள்ளோம். இன்று எமது நாட்டில் ஒரு புதிய சகாப்தம் திருக்கோயில் வரலாற்றில் உதயமாகியுள்ளது. புனரமைப்பும், விழாக்களும், குடமுழுக்கும் சிறந்து விளங்கும் சம்பவங்களை எங்கும் காணமுடிகின்றது. இடைக்காடு புவனேஸ்வரி அம்பாளுக்குக் குடமுழுக்குவிழா நடைபெறவிருப்பது மேலும் அருள்மிகு நிகழ்ச்சியாகும். இவ்வூர் மக்கள் சைவப் பண்பாட்டிலும் தமிழ்ப்பற்றிலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். இவர்களது சைவப்பற்றுக்குக் காரணமாக இன்று புவனேஸ்வரி அம்பாள் ஆலயத் திருப்பணிகள் நிறைவேறிக் குடமுழுக்கு விழா நடைபெறுவது பெரும் புண்ணியச் செயலாகும். எனவே எமது மனம் மொழி மெய் ஆகியவற்றால் நிறைவான வாழ்த்தை இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் கூறி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி, J. P
தலைவி
ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதிதுணை

## பிரதிஸ்டா பிரதமகுரு
# ஆசியுரை

அங்கிங்கு எனாதபடி எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை ஆகமங்களிலே கூறப்பட்ட பிரகாரம் ஆலயத்தை அமைத்து அதில் இறைவனின் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து திருவருள் சக்தியை உண்டாக்குவது தான் மஹாகும்பாபிஷேகம் என்பது. முன்பு இருந்த ஆலயம் பழுது அடைந்தால் அதனைத் திருத்தி அமைத்து திரும்பவும் மருந்து சாத்தி பிரதிட்டை செய்வது ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் என்று கூறப்படும்.

இறைவனை எமது முன்னோர்கள் பல பல பாங்கிலே வைத்து வழிபாடு செய்து பயன் அடைந்துள்ளார்கள். அதாவது பொறுப்புள்ள குடும்பஸ்தனாக, சிவபெருமானாக, தாயாக, குமாரர்களாக இப்படி பல பல வடிவங்களாக வழிபாடு செய்து வந்திருக்கிறார்கள். அந்த ஒழுங்கு முறையிலே இந்த இடைக்காடு பகுதியிலே இறைவனைத் தாயாக புவனேஸ்வரி அம்மையாக பல்லாண்டு காலமாக வழிபாடு செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் வழிபாடு செய்து வந்த இந்த ஆலயம் காலம் கடந்து விட்டபடியினாலே பழுதடையத் தொடங்கியது. அதனைத் திருத்தி அமைத்து மஹாகும்பாபிஷேகம் செய்து வைக்க வேண்டுமென்று பெரு முயற்சி எடுத்தார்கள் சபையினர். தேவியின் திருவருளும் அவர்களுக்குத் துணை புரிந்தது. சைவப் பெருமக்களின் பொருளும் அன்பும், ஆதரவும், அவர்களுக்குக் கிடைத்தது. தேவியின் திருவருள் துணை கொண்டு முகூர்த்தம் குறிக்கப்பட்டது. புவனேஸ்வரி அம்மையின் திருவருளினாலே குறித்த சுபமுகூர்த்தத்திலே மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. எனது அன்பான பெருமக்களே! அன்னையினது இந்த மஹா கும்பாபிஷேகம் உத்தமகலா சூத்திரக் கிரம நவகுண்டபக்ஷ யாகம் போடப்பட்டு செய்யப் பெற்றது.

பேரன்புமிக்க பெருமக்களே!

ஸ்ரீ புவனேஸ்வரி தேவியின் பெருங்கருணையினாலே உங்களது துன்பங்கள் துயரங்கள் நீங்கிச் சீரும் சிறப்பும் பெற்று நீண்ட ஆயுளோடும் குறைவற்ற செல்வத்தோடும் வாழவேண்டும் என்று ஆசீர்வதிக்கின்றோம். பேரன்புமிக்க பெருமக்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையுடனும், பயபக்தியுடனும், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, அன்னையின் புகழ்பாடி வேண்டுதல் செய்து வருவீர்களானல் அன்னை புவனேஸ்வரி தேவியின் திருக்கடைக்கண் பார்வை உங்கள் மீது படும், தேவியின் திருகடைக்கண் பார்வைக்கு நீங்கள் பாத்திரராகி விட்டால் அன்னை உங்களுக்கு

**தனந்தருங் கல்விதரு மொருநாளுந் தளர்வறியா**
**மனந்தருந் தெய்வவடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா**
**இனந்தரும் நல்லனவெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே**
**கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.**

புவனேஸ்வரி தேவியினது கடாட்ச வீட்சண்ணியங்களே மெய்யன்பர்களுக்கு இம்மை மறுமை இன்பங்களைக் கொடுக்க வல்லது.

நிறைந்த அருட்செல்வத்தையும், பொருட் செல்வத்தையும், கல்விச் செல்வத்தையும் தருவார். தளர்வு இல்லாத சோர்வில்லாத மனத்தையும் தெய்வத்தன்மை பொருந்திய பேரழகையும், கபடமில்லாத மனைவி மக்கள் சுற்றம் இவைகளையும், நல்லன எல்லாவற்றையும் தந்து அருள் செய்யும்படி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் திருப்பாதங்களை உள்ளன்புடன் வணங்கி சமஸ்த மக்களையும் ஆசீர்வதிக்கின்றேன்.

லோகா சமஸ்த சுகினோ பவந்து

இங்ஙனம்
**சிவஸ்ரீ கந்தசிவபாதசுந்தரக் குருக்கள்**
கிரியாவித்தகர், குருமணி, விநாயகபூஜா துரந்தரர், சிவகமகிரியாரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகக் கிரியா விளக்கம்

முன் செய்யப்படும் கிரியைகள்

1. ஆசாரியவரணம், 2. அனுக்ஞை. 3. விக்னேஸ்வர பூஜை, 4. தனபூஜை, 5. பிரவேச பலி 6. ரட்சோக்னஹோமம், 7. வாஸ்துசாந்தி, 8. மிருத்சங்கிரஹணம், 9. அங்குரார்ப் பணம், 10. ரட்சாபந்தனம், 11. யாகாலங்காரம், 12. கலாகர்ஷணம் என்பனவாகும்,

1. அறவொலி ஆகமங்களை அறிந்த ஆதிசைவர்கள் சமய விசேட நிர்வாண ஆசார் யாபிஷேக அஸ்திராபிசேகாதி கிரியைகளால் மலமாயாதிபாச நிவர்த்தி பெற்றவர்களாய் சிவபூஜை செய்பவர்களாய் உள்ளனரா என்றறிந்து அவர்கள் இல்லறத்தவராயும் மக்கட்பேறு உள்ளவராயும், மந்திரம் கிரியை பாவனை உணர்ந்தவராயும் உள்ளவர்களை ஆசாரியராய்த் தேர்ந்து எடுப்பதே ஆசாரிய வரணம் எனப்படும்.

2. ஆகமங்களை உணர்ந்த பெரியவர்களது இசைவையும் விநாயகர் சிவன் சக்தி முருகன் சண்டிகேசன் நந்தி முதலானவர்களை வழிபட்டு உத்தரவு பெறுதலே அனுக்ஞை எனப்படும்.

3. இடையூறுகள் தோன்றாமல் இருக்க விநாயகரை வழிபடுதலே விக்னேஸ்வர பூஜை எனப்படும், கணபதி ஹோமமும் விநாயகரது பூஜையின் பாற்படும்.

4. தனலட்சுமி, தான்யலட்சுமி, வித்யாலட்சுமி, கீர்த்திலட்சுமி சௌபாக்யலட்சுமி, சந்தானலட்சுமி. வீரலட்சுமி, ஜெயலட்சுமி ஆகிய அஷ்டலட்சுமி சகித மஹாலட்சுமியைப் பூஜிப்பதும் நவதான்யங்களை வைத்துப் பூஜிப்பதும் தனபூஜையின் பாற்படும். நவக்கிரஹ ஹோமமும் தனபூஜையின் ஒரு பாகம் என்பர்.

5. ஆலயத்தின் நடுவிலும் கிழக்கு முதலான எட்டுத் திக்கிலும் உள்ளவர்களான இலட்சுமி, யட்சன், ராட்சஸன், பூதம், பிசாசு, பிரம்மராட்சசன், மஹாகாளி, பைர வன் முதலானவர்களைப் பூஜித்து யட்சாதிகளை முறையே திருப்தி செய்து, மலை, காடு, பிதுர்லோகம், காடு, நதிக்கரை, நந்தவனம், சமுத்திரக்கரை, சுடுகாடு முதலிய இடத் திற்கு விரட்டுவதற்குப் போடும் பலியே பிரவேசபலி எனப்படும். பிரவேசம்-கிளம்புதல் பலி—அதன் பொருட்டு அளித்தல், யட்சாதி இடத்தில் இந்திராதிகளைப் பூஜித்தல் வேண் டும். இதுவே பிரவேச பலியாகும்,


6. அஸ்திரதேவபூஜை-பின்னர் 5 குடங்களில் சிவாஸ்திரம், பாசுபதாஸ்திரம். அகோ ராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சூரிகாஸ்திரம் எனும் ஐந்து அஸ்திரங்களை பூஜை செய்து ஹோமம் செய்து அஸ்திர தேவரிடத்திலாவது தன்னிடத்திலாவது—ஒடுக் கிக் கொள்ளுதல், பின்னர் கும்பஜலத்தால், இடங்களை நனைத்தல். இதற்கு ரட்சோக்ன ஹோமம் என்று பெயர்.

நடுவில் ஒரு குடமும் தெற்கே ஒரு தேங்காயும் வடக்கே கத்தியும் வைத்து, குடத் தில் ரட்சோக்ன தேவதையையும் தேங்காயில் சிவனையும் கத்தியில் சத்தியையும் வழிபட்டு ஹோமம் செய்து தன்னிடத்து ஒடுக்கி கத்தியால் தேங்காயை உடைத்து விக்னத்தை நீக் குதல். பின் குடத்துநீர் தெளித்தல் ஆகிய இதுவும் ரட்சோக்ன ஹோமம் எனப்படும்.

7 ஒருவராலும் அழிக்க முடியாத ஆற்றல் பெற்றவனாகவும் கைகால்களை நீட்ட இடம் இன்மையால் மடக்கிக்கொண்டு முடங்கிக் கிடக்கின்றான் வாஸ்துபுருஷன். இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர்



அலங்கரிக்கப்பட்ட மூலமூர்த்தியாகிய புவனேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்தால் பூகம்பாதிகள் தோன்றும். இவன் அசையாமல் இருக்க இவனுக்கு வேண்டிய உணவுகளைத் தந்து மகிழ்வித்து அனந்தன் முதலிய பாம்புகளைக் கொண்டு கட்டிப்போட்டு இவன் மீது ஐம்பத்துமூன்று தேவர்களை அமர்த்திப் பூஜிப்பதும் ஹோமம் செய்வதும் கொடும்பாவிபோல் ஒன்று கட்டி அதை வாஸ்துபுருஷனுகப் பாவித்து நெருப்பிட்டு எரித்து இழுத்துச் செல்வதே பரிசுத்தமாகும். இச்செயல் அனைத்தும் வாஸ்துசாந்தி எனப்படும். வசிக்கின்றவர்களைச் சாந்திப்படுத்துவது வாஸ்து சாந்தியாகும்.

8. யாகத்தின் செயலையும் பலனையும் அறிவதற்குப் பயன்படும் தானியங்கள் முளைப்பதற்கு ஏற்ற மண்ணை எடுத்தலே மிருத்ஸங்கிரஹணம் எனப்படும். மிருத்து என்றால் மணல்; கிரஹணம் என்றால் எடுத்தல். எனவே இதற்கு மிருத்சங்கிரஹணம் என்று பெயர்.

9. எள், கடுகு, பயறு, உளுந்து, துவரை, கொள்ளு, கடலை, மலைநெல், கோதுமை என்னும் ஒன்பது தான்யங்களைப் பாலில் ஊற வைத்து நடுவில் உள்ள குடத்தில் சோம நாதரையும் பாலிகைகளில் 12 சூரியர்களையும் பூஜை செய்து ஊறிய தான்யங்களை பாலிகையில் முளைப்பதற்காகப் போடுவதே அங்குரார்ப்பணம் என்று பெயர். நன்கு முளைத்திருப்பின் யாகக்கிரியைகள் நன்கு நடைபெற்றன என்றறிதல் வேண்டும். கோணலாகவும் கறுப்பாகவும் முளைப்பினும், தானியங்கள் முளைக்காமலேயே போனாலும் யாகக்கிரியைகளில் குறை உள்ளன என்றும் அறிந்து பிராயச் சித்தம்செய்தல் வேண்டும். தானியங்களை முளைக்கப் போடுவதே அங்குரார்ப்பணம் என்று பெயர்.

10. சிவ யாகத்தைச் செய்கின்றவர்கள் என்றும் பரிசுத்தமாய் இருப்பதற்கும் பிறப்பு இறப்பினால் ஏற்படும் சூதகம், ஆசௌசம் முதலிய தீட்டுகள் இவர்களை வந்தடையாமல் இருப்பதற்கும் பாதுகாப்பாய் செய்யப்படுவதே ரட்சாபந்தனம் எனப்படும். காக்கும் சக்தி உடைய கயிறு ரட்சை எனப்படும். பந்தனம்—கட்டுதல். கயிறு கட்டிக் கொள்வதே ரட்சா பந்தனம் எனப்பெயர் பெறும்.

11. யாகசாலையில் வேதிகையின் நடுவிடத்தில் நெல் முதலிய ஏழு தானியங்களைப் பரப்பி பிரதான கும்பத்திற்காக முக்காலி போடுதல், அதன் வடபாகத்துப் பீடசக்தி கும்பத்திற்கு இடம் அமைத்தல், கிழக்கு முதல் எட்டு பாகங்களில் அஷ்டவித்தியேச கும்பங்களுக்கு இடம் அமைத்தல், யாகசாலையில் கிழக்கு வாசலின் வடபாகத்தில் நான்கு கலசங்களும், தென்பாகத்தில் நான்கு கலசங்களும். தெற்கு வாசலின் கிழக்குப் பக்கத்தில் இரண்டு கலசங்களும், மேற்குப் பக்கத்தில் மூன்று கலசங்களும், மேற்கு வாசலின் இரண்டு பக்கங்களிலும் நான்கு நான்கு கலசங்களும், வடக்கு வாசலின் மேற்குப் பாகத்தில் மூன்று கலசங்களும், கிழக்குப் பாகத்தில் மூன்று கலசங்களும் ஆக 27 கலசங்களை வைத்தல் வேண்டும். வட கிழக்கு மூலையில் யாகேஸ்வரர், யாகவர்தனீ ஆகிய இரண்டு கலசங்களைத் தனியாக வைத்தல் வேண்டும்; தென்கிழக்கு மூலையில் சமைப்பதற்கு அடுப்பு வைத்தல் வேண்டும். தென் மேற்கில் பஞ்ச கவ்வியத்திற்கு இடம் அமைத்தல் வேண்டும்: வடமேற்கில் பாலிகை வைத்தல் வேண்டும்; இதுவே யாகாலங்காரம் எனப்படும்.

12. கும்பத்திற்கு சாற்றும் வஸ்திரம் தோல். கும்பத்தில் சுற்றிய நூல் நரம்பாகவும், கூர்ச்சம் எலும்பாகவும், கும்பத்துள் போடப்படும் பொன் முதலியன சுக்கிலமாகவும், கும்ப நீர் மேதையாகவும், கும்பத்துள் போடப்படும் மண் மாமிசமாகவும், குங்குமப்பூ முதலிய வாசனதி திரவியங்கள் இரத்தமாகவும் பாவித்து இந்த ஏழு தாதுக்களால் ஆன கும்பத்தைச் சரீரமாகவும் மந்திரத்தை உயிராகவும் பாவித்தலே கலசம் எனப்படும். இறைவனை தத்துவங்களாகிய என்புந்தசையும் பெற்றவராகவும், பதங்களை நரம்பாகவும் மந்திரங்களை இரத்தமாகவும், வர்ணங்களைத் தோலாகவும், புவனங்களை உரோமமாகவும், கலைகளைச் சரீரமாகவும் பெற்றவராய் இறைவனைக் கருதி முறைப்படி பஞ்சாசன பஞ்சாவரண பிரகாரம் பூஜித்து முன் கூறிய கலசத்தில் சலாசனம் வரை பூஜை செய்து இறைவனைத் தன் இருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடத்தில் இருந்து கலசத்திற்கு வரும்படி அழைத்தலே கலாகர்ஷணம் எனப்படும். இறைவனது கலைகளைக் கும்பத்திற்கு இழுத்தல் என்றும் பொருள் உண்டு. இறைவன் தான் இருக்கும் வடிவாம் சின்னத்தில் இருந்து கலசமாம் உருவில் வந்ததாகப் பாவித்தலே கலா ஆகர்ஷணம் எனப்படும். கலாகர்ஷணம் ஆன உடனே துணிகொண்டு முன் உள்ள இறைவனது மேனியை மறைத்தல் வேண்டும். உடனே யாத்திரா தானம் என்ற நவகிரஹபிரீதி செய்து கலசத்தில் எழுந்தருளிய இறைவனை யாகாலயத்தில் கொண்டு வந்து வைத்தல் வேண்டும்.

**யாக பூஜை எனும் மண்டப பூஜை**

ஒரு தினத்திற்கு 8 யாமங்கள். இதில் இரண்டு யாமங்கள்-பூத பிரேத பைசாசங்களுக்குப் பகற்பொழுதில் ஒரு யாமத்தை நீக்க வேண்டும். ராட்சச அசுரர்களுக்கு இரவுப் பொழுதில் ஒரு யாமத்தை நீக்க வேண்டும். அஃதாவது 12 மணிக்கு மேல் 3 மணி வரை தேவ காரியங்களைச் செய்தல் கூடாவாம். எனவே இரவிலும் மேற்கூறிய நேரம் உகந்தது அல்லவாம். 8 யாமங்களில் 2 யாமங்கள் நீங்கவே 6 யாமங்கள் தெய்வத்திற்கு ஏற்றன வாக சைவசாத்திரங்கள் கூறுகின்றன.

முதல் கால யாக பூசை அர்த்தஜாமம் எனும் முன்னிரவு பூஜை

இரண்டாம் நாள் காலை: யாக பூஜை. திருவனந்தல் எனும் உஷத் கால பூஜை விடியற் காலபூஜை என்றும் கூறலாம்.

இரண்டாம் நாள் மாலை: யாக பூஜை காலசந்தி எனும் பகல் தொடக்க பூஜை.

மூன்றும் நாள் காலை: யாக பூஜை உச்சி காலம் எனும் பகல் பூசையாகும்

மூன்றும் நாள் மாலை: யாக பூஜை பிரதோஷகாலம் எனும் பிற்பகல் பின் பாதி பூஜையாகும். இரவு தொடங்கும் முன் செய்யும் பூஜை என்றும் கூறலாம்.

நான்காம் நாள் காலை: யாக பூஜை சாயரட்சை எனும் இரவு தொடக்க பூஜை யாகும். இறைவனைச் சாரச்சார அவன் மக்களைக் காக்கின்றான் என்ற உண்மையை உணர்த்துவதே சாயரட்சையாகும். எனவே யாக பூஜை மாலை தொடங்கி காலையில் முடிக்கப் பெறுகிறது. அன்றே குடமுழுக்காட்டும் நடைபெறும். மண்டபத்தில் விளங்கும் நான்கு வாசல் புறங்களில் வாசல் ஒன்றனுக்கு 32 தெய்வங்கள் வீதம் பூஜை செய்கின்றார்கள். ஐந்தாகிய மண் முதலிய தத்துவங்களை நடுவிடத்தில் அமைக்கின்றனர். சூர்யாதி சண்ட பரியந்தம் 27 பரிவாரங்களையும் யாகரட்சகரான சிவசக்திகளையும் பூஜை செய்கின்றனர். பிறகு வேதிகையின் நடுவில் இறைவனையும் இடப்பக்கத்து பீடசக்தியையும் எட்டுத் திக்கிலும் வித்தியேச கணங்களையும் பூஜை செய்கின்றனர். பின்னர் வேள்வியில் இறைவனையும் அவனுடன் சேர்ந்த பரிவாரங்களையும் வழிபடுகின்றோம். இதுவே யாக பூஜை எனும் மண்டப பூஜையாகும்.

**கும்பாபிஷேகமாம் பெருஞ்சாந்தி விழாவின் உட்பொருள்**

சிவாசாரியர்கள் தன்னுள் விளங்கும் இறைவனை ஆ—பசு எனும் ஜீவாத்துமாக்கள். லயம்—ஒடுங்கும் இடம் எனும் கோவிலில் விளங்கும் இறைவனோடு இரண்டறக் கலக்க செய்து, பின் அவ்விறைவனை கும்பத்துள் கொண்டு வந்து நிறுத்தல். அதன்பின் அவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறைவனை வேள்வியாம் யாகத்தில் எழுந்தருளச் செய்தல். அதன்பின் அடியார்கள் உள்ளத்துள் இறைவனை விளங்கச் செய்து தனது மந்திர சத்தியால் எங்கும் விளங்கும் இறைவனை வேள்வியில் கொண்டு வந்து அதிலிருந்து இறைவனைக் கும்பத்தில் சேர்த்துக் கும்பத்திலிருந்து அபிஷேகம் செய்வதின் மூலமாய் ஆலயத்தில் உள்ள இறைவனிடம் தெய்வீக சக்தியைச் சேர்ப்பதே கும்பாபிஷேகம் எனப்படும். அதற்குப் பிறகு சண்டயாகம் செய்து அஸ்திர மந்திரங்களால் ஹோமம் செய்து சாந்தியை உண்டாக்குவதும் திருக்கல்யாணம் செய்து மக்களை மகிழ்விப்பதும் வீதியுலாக் காட்சி தருதலும் மண்டலாபிஷேகம் தொடங்கி நிறைவு பெறுவதும் மண்டலாபிஷேகப் பூர்த்தி நாள் அன்று ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும், சாந்தி உண்டாவதற்காக 1008 கலசங்களை வைத்தோ அல்லது 1008 சங்கங்களை வைத்தோ மஹாஸ்தபனம் எனும் பூஜைசெய்து இறைவனை வழிபடுவதே பெருஞ் சாந்தியாகும்.

சிவாகம கிரியாரத்தினம்
ஸ்ரீலஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக் குருக்கள்
சபரிகிரிபீடம் ஐயப்பசுவாமி தேவஸ்தானம், கட்டுவன்

உ
அம்பாள் துணை

## கோவில்களில் பிரசாதம் வழங்குவதன் நோக்கம்

'ப்ரஸாதம்' என்ற சமஸ்கிருத சொல்லுக்கு 'மனத் தெளிவு' என்பது பொருள்.

தெய்வங்கள் நம்மைப் போல ஸ்தூலமாகச் சாப்பிடுவதில்லை. ஒரு தெய்வத்துக்கு நாம் நைவேத்தியம் செய்யும்போது அந்தத் தெய்வத்தின் கண்களிலிருந்து ஓர் ஒளி புறப்பட்டு வந்து நாம் நைவேத்தியத்திற்கென்று வைத்த உணவுப் பொருள்களை ஸ்பர்சிக்கின்றது என்று சாஸ்திரங்களும் மகான்களும் குறிப்பிட்டுள்ளனர். தெய்வங்கள் கண்களாலேயே உணவை ஏற்பதனுற்றான் த்ருஷ்டி போக் (போகம்) என்ற சொல் எழுந்தது.

இறைவனுக்கு நைவேத்தியம் செய்த பொருளைத் தரித்தாலும், புஷித்தாலும் உடலும் உள்ளமும் பரிசுத்தமாகி மனதில் தெளிவும் அன்பும் வளரும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

உணவு எப்படியோ அப்படியே உள்ளமும் அமைகிறது, இறைவனுக்கு நிவேதனம் செய்யப்பட்ட உணவு புனிதம் பெறுகிறது. அதனுல்தான் பக்தர்கள் தாங்கள் சாப்பிடுவதற்கு முன்பு எதையும் மானசிகமாக இறைவனுக்கு அர்ப்பித்துப் பிறகு உட்கொள்கிறார்கள். இறைவனின் பிரசாதம் உட்கொள்பவரின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும். அந்த உள்ளத்தில் பக்தியைத் தோற்றுவிக்கும் என்பது உண்மையே ஆகும்.

சுவாமி கமலாத்மானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


# இடைக்காடு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய தலபுராணம்

## பாரோர் பசிபோக்கும் புவனேஸ்வரி படிமத்தார் முன்சென்று பசிக்குதென்பதா?

அன்னமளித்து ஆருயிர் புரப்பவள் அன்னை புவனேஸ்வரி!
பாரோர் பசிதீர்க்கும் பராபரிக்கே பசி வந்தால் .........
யாரிடம் செல்வாள்?
பக்தி மிகுந்த படிமத்தாரிடம்!
(படிமம் – அத்து – ஆர்) படிமத்தார் என்றால் தெய்வம் உறையப் பெற்றவர் என்று பொருள்.
படிமத்தார் வேலரிடம் புவனேஸ்வரியே தன் பசிதீர்க்க வந்த
திருவிளையாடல் நடந்த இடம் தான் " இடைக்காடு "
'அன்னதானக் கந்தன்' என்ற அற்புதத் திருப்பெயர் பூண்ட செல்வச் சந்நிதி முருகன் கோயில் கொண்டிருக்கின்றான் தொண்டைமானாற்றின் ஒரு கரையில்,
அத்திவ்ய ஆற்றின் மறுகரையில்,
தொண்டைமானாறு அச்சுவேலி வீதியின் மேற்குப் பக்கத்தில்
அச்சுவேலியிலிருந்து இரண்டுமைல் தொலைவில் தான்
அன்னை புவனேஸ்வரி அற்புதம் நிகழ்த்திய திருத்தலம் அமைந்துள்ளது
கி . பி. 18ம் நூற்றாண்டின் முற்பகுதி
ஒல்லாந்தர் ஆட்சி ஈழத்தில் இடங்கொண்டு
தொல் நெறியாம் சைவநெறிக்குத் தொல்லை கொடுத்த காலம்.
சைவத் திருக்கோயில்கள் தரைமட்டமாக்கப்பட்டு
கிறித்தவ தேவாலயங்கள் தாபிக்கப்பட்ட நேரம்!
ஆம்!
பரசமயத் தாக்கத்திலிருந்து சைவநெறியைக் காக்க சைவக் கோவில்களை உருவாக்க வேண்டும்.
சைவசமயிகள் அஞ்ஞானிகள் எனப் பரசமயத்தவர் போதித்த காலம்!
சைவநெறி நின்றோர் அடிமைகளாக ஒடுக்கப்பட்ட நேரம்.
சாப்பிட்ட வாழை இலை இறப்பில் இருக்க வேண்டிய அவலம்!
ஆம்!
இந்நிலையில் தான்......
அகந்தை கொண்டவர் பிரம்மா விஷ்ணு வாறலும்
அடி முடி காண்பதற்கு அரியவர்
ஆனால் அடியார்க்கு எளியவர்!
இறைவனின் இடப்பாகத்தில் இடம் கொண்ட
அன்னை புவனேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர்



அலங்கரிக்கப்பட்ட மூலமூர்த்தியாகிய புவனேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுதுண்டு உயிர் ஓம்பும் ஒப்பிலாத்துறவி,
படிமத்தார் வேலரிடம்
தன் பசி தீர்க்க வந்தார்! பெரு மூதாட்டியாக
ஆம்!
"எனக்குப் பசிக்கின்றது; அமுது பொங்கித் தா"
என்று கேட்டார் அன்னபூரணி
உண்டி கொடுத்து உயிர் ஓம்பும்
படிமத்தார் வேலரும்
உடனே,
தன் "நல்லிகப்பன்" வயலில் விளைந்த
புது நெல் குற்றிய அரிசியில் அமுது பொங்கினார்.
வயல் நடுவில் அமைந்த குளக்கரையில்
வடலி நிழலில் மண்பானையில் பொங்கிய அமுதை
வடலி ஓலையில் செய்த மூன்று தட்டுவங்களில் படைத்தார்.
அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலத்தான் திருத்தேவி
அடியார் படைத்த அமுதை அன்போடு ஏற்றுக் கொண்டார்.
ஆம்!
படிமத்தார் படைத்த அமுதுண்ட புவனேஸ்வரி,
தன் மடியிலிருந்து எடுத்த சிவலிங்கத்தையும் செப்பினாலான சிலம்பையும் கொடுத்து
இவற்றையும் வைத்துத் தனக்கு நித்திய பூசை நிகழ்த்துமாறு திருவாய் மலர்ந்தருளினார்.
ஆம்! படிமத்தார் வேலர் பக்தியுள்ளவர்!
தெய்வீக சக்தியுள்ளவர்.
அதனால், சன்னதமாடி எதிர் காலத்தில் நிகழ இருப்பவற்றை முன் கூட்டியே கூறுவார்
தீர்க்க தரிசனமாக!
கோதாரி, வைசூரி போன்ற கொள்ளை நோய்கள்
எம் கிராம மக்களைத் தாக்காமல் தன் தெய்வீக சக்தியால் தடுப்பார்.
இதனால் எம்மூர் மக்கள் அவரைத் தெய்வப் பிறவியாகப் போற்றினர்.
ஆம்!
தெய்வப் பிறவியான அவர் முன்
தெய்வமே தோன்றித் திருக்காட்சி கொடுத்தது
பெரிய அற்புத மல்ல.
ஆசாரசீலராக, அன்னையின் அடியானாக விளங்கிய வேலர் அன்னையின் கட்டளைப்படி கல்லினால் செய்த உருவத்தை அன்னை புவனேஸ்வரியாகவும் அவள்கொடுத்த சிவலிங்கத்தைச் சிவனாகவும் செப்புச் சிலம்பைக் கற்புத்தெய்வம் கண்ணகிஅம்பாளாகவும் வைத்து நித்திய பூசைகள் செய்து பூசகரானார்.
குளந்தொட்டு வயல் விளைத்து வளம் பெருக்கி,
வறுமையோட்டி அறம் வளர்த்த வேலர்
குளக்கரையில் கோயில் கொண்ட
அன்னை புவனேஸ்வரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல விருட்சங்களாக
அரசையும் வேம்பையும்
குளக்கரையில் நட்டுவைத்தார்.
ஆம்!
அவர் அன்று நாட்டிய தல விருட்சங்களான
அரசும் வேம்பும்
அண்டமெல்லாம் வியாபித்துள்ள
சிவனும் சக்தியும் போலச்சடைத்து
வளர்ந்து பூவுலகத்தைத் தலையில் தாங்கும்
நாகதம்பிரானுக்கும் நாநிலத்து அனைத்து
உயிர்களுக்கும் நிழல் நல்குகின்றன.
படிமத்தார் வேலர்
பராபரியான புவனேஸ்வரியின் பாதாரவிந்தங்களை அடைந்த பின் அவருடைய தம்பியார் "தனிமை தீர்த்தார்" அண்ணன் செய்த திருத்தொண்டை அணுவளவும் பிசகாது செய்து வந்தார்.
தனிமைதீர்த்தார் தள்ளாத வயதடைந்ததும் அவருடைய வம்ச வித்து "வல்லியார்" பூசகரானார்.
வல்லியார் "உடையார்" எனும் அரசாங்க பதவி வகித்த காரணத்தால் "வல்லி உடையார்" என மக்களால் அழைக்கப்பட்டார்.
ஆம்!
ஓலைக் கொட்டிலில் கோயில் கொண்ட அன்னை புவனேஸ்வரிக்குச் சுண்ணும்பும், கல்லும் கொண்டு கோயிலும், குளமும் கட்டி அன்னை புவனேஸ்வரி அன்றளித்த விக்கிரகங்களையே பிரதிஷ்டை செய்வித்தார்.
ஆண்டாண்டு காலமாகப் படிமத்தார் வேலர் பரம்பரையே பூசை செய்து பராமரித்து வந்த கோயிலுக்கு;
அன்னையின் அருளால் ஊர்ப் பொது மக்கள் உற்பத்தி செய்த புகையிலை சாமை, குரக்கன், மிளகாய் போன்ற பொருட்களை அன்பளிப்பாகப் பெற்று;
1920-ம் ஆண்டளவில் இவ்வாலயத்தை விரிவுபடுத்திக் கட்டினர்கள்.
இவ்வாலயத்தில்
மூலமூர்த்தியாக புவனேஸ்வரி அம்பாளுக்கும்
பரிவாரமூர்த்திகளாக
சந்தான கோபாலருக்கும்
கண்ணகை அம்பாளுக்கும் கோயில் கட்டுவித்தனர்
தலவிருட்சத்தின் கீழ் நாகதம்பிரானை வைத்து வழிபட்டனர்.
புவனேஸ்வரி அம்பாளின் புண்ணிய தலத்தை
படிமத்தார் வேலரின் பரம்பரையில் தோன்றிய ஞானர், சுப்பர், ஞானர் ஆகியோர் மாறி மாறி நிர்வகித்தும் பூசை செய்தும் வந்தனர்.
1974-ம் ஆண்டளவில் மீண்டும் இத்திருத்தலத்தில் திருப்பணி வேலைகள் செய்து
கும்பாபிஷேகம்
03 – 05 – 1974 இல் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர்!

காவற் தெய்வம்!

அம்பாளின் ஆலயத்தில் வைரவருக்கும் கோயில் கட்டி குடமுழுக்கு 07 - 02 - 79 இல் நடைபெற்றது.

புவனேஸ்வரி

புவனத்தின் நாயகி! அனைத்துயிர்களின் அன்னை

அவளுடைய ஆலயம் அனைத்துயிர்களுக்கும் சொந்தம்!

படிமத்தார் வேலரின் குடும்பச் சொத்தாக விளங்கிய கோயிலை ஊர்ப் பொதுமக்கள் சொத்தாக்கிய பெருமை ஆலய உரிமையாளராகவிருந்த உயர்திரு. சு. ஞானசபேசன் அவர்களையே சாரும்.

கோயிலை நிர்வகிக்க ஆலய நிர்வாகசபை ஒன்றை அமைத்து சகல அதிகாரங்களையும் சட்டரீதியாக அச்சபையிடம் ஒப்படைத்தார்.

22 – 09 – 1982 தொடக்கம்

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையே இக்கோயிலைப் பரிபாலித்து அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்ட வழி செய்கின்றது.

ஆலய பரிபாலன சபை

நித்திய நைமித்திய பூசைகளை ஆகம விதிமுறைப்படி நடாத்த ஏற்ற ஒழுங்குகளைச் செய்ததோடு, பழுதடைந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து மெஞ்ஞான ஒளி பரப்பும் அன்னை புவனேஸ்வரியின் ஆலயத்திற்கு விஞ்ஞான விளைவான மின்னொளி பொருத்தியும், அலங்காரத் திருவிழாக்களைச் செய்தும், கண்ணகை அம்பாளுக்குப் பொங்கல் விழாவெடுத்தும் அண்டை அயற் கிராம மக்களெல்லாம் அன்னையின் ஆலயத்தை நாடி வந்து அருள்பெற்றுப் பெருவாழ்வு பெறத்தக்க முறையில் சிறப்புற நிர்வகித்து வருகின்றது.

1987-ம் ஆண்டு

நமது நாடு கண்ட அனர்த்தங்கள் வார்த்தையில் வடிக்கவொண்ணுதவை. அருளாட்சி செய்கின்ற அன்னை புவனேஸ்வரியின் ஆலயமும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களும் சேதமுற்றன.

அதனுல்,

புனருத்தாரணப் பணிகளுக்காக அன்னையின் அருளால் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

ஆம்!

அன்னை புவனேஸ்வரியின் அருட்கொடையைப் பெற்ற அடியார்கள் அள்ளி வழங்கிய பொன்னும் பொருளும் கொண்டு பழுதடைந்த கட்டடங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. சேதமடைந்த விக்கிரகங்கள் புதுப்பிக்கப்பட்டன. களவுபோன எழுந்தருளிக்குப் பதிலாகப் புதிய எழுந்தருளி உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன்,

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகருக்கும், ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியருக்கும், நானிலந் தாங்கும் நாகதம்பிரானுக்கும், நானிலத்தை ஆட்டிப்படைக்கும் நவக்கிரக நாயகருக்கும், சண்டேஸ்வரிக்கும் புதிதாகக் கோயில்கள் எழுப்பப்பட்டன.

புனருத்தாரண வேலைகள் பூர்த்தியானதும் 08 – 06 – 1989ஆம் திகதி வியாழக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. குடமுழுக்கைத் தொடர்ந்து நாற்பத்தைந்து தினங்கள் மண்டலாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

புனருத்தாரணம் செய்யப் பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்கும் ஆலயத்தில் அன்னை புவனேஸ்வரி அருட்காட்சி அளிக்கின்றாள். அவளுடைய அடிகளை அல்லும் பகலும் அனவரதமும் துதித்து தேவியின் திருவருளைப் பெற்று பிறவி எடுத்ததன் பெரும்பயனை மீண்டும் பிறவா நிலையைப் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வை பெற்றுய்வோமாக.

பரிபாலன சபை

## தேங்காய் உடைப்பதேன்?

தேங்காயை உடைத்து வைப்பது ஒரு சிறந்த உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. தேங்காயின்மேல் கடினமான ஓடும், அதனுள்ளே வெண்மையான பருப்பாகிய காய்ப் பகுதியும், அதனுள்ளே இனிய இளநீரும் இருக்கின்றன. உருண்டையான புறஓடு பிரபஞ்சத்தை ஒத்திருக்கிறது. இரண்டும் கோளவடிவம் உடையன. அது உலக மாயையைக் குறிப்பது. உள்ளேயுள்ள வெண்நிறமான பகுதி பரமாத்மாவைக் குறிக்கிறது. இளநீர் அதனால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்திருக்கிறது. ஜீவாத்மா மாயையினால் பரமாத்மாவை உணராமல் பரமானந்தப் பிராப்தியும் பெறாமல் நிற்கிறது. அதுபோல் வெள்ளைப் பகுதியையும் இளநீரையும் காணமுடியாமல் ஓடு மறைக்கிறது. ஈஸ்வர சந்நிதியில் மாயையை அகற்றித் தேஜோமய சுவரூபத்தைக் காட்டி அவர் அருளால் பரமானந்தப் பேரமுதத்தை நுகரச் செய்யும் செயலையே இது காட்டுகிறது. இவ்வளவு உட்கருத்துக்களையும் உடையதாக இருப்பதனால் தேங்காயை ஆலய வழிபாட்டில் மிகவும் முக்கியமானதாக வைத்திருக்கிறார்கள். இது எக்காலத்திலும் கிடைக்கக்கூடியது.

சுபம்


## தியானம்

தூய்மையான மனமுடைய ஒருவன் இறைவன் நாமத்தை ஜெபிக்கும்போது அந்நாமம் அவனுள்ளிருந்து தானாகவே குமிழியிட்டுக் கிளம்புவதை அவன் உணர்கிறான். நாமத்தை ஓத அவன் பாடுபடவேண்டும். ஒவ்வொருவரும் சோம்பேறித்தனத்தை விடுத்து, குறிப்பிட்ட காலத்தில் ஜெபமும் தியானமும் செய்யப் பழகுதல் வேண்டும்.

அன்னை சாரதாமணிதேவியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விநாயகர்




அலங்கரிக்கப்பட்ட மூலமூர்த்தியாகிய புவனேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேகத்தை நடத்திவைத்த
பிரதம சிவாச்சாரியார்



குடமுழுக்கு வைபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி

# உலக அன்னை

# அருள்மிகு இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள்

## காப்பு

மண்ணில் மாசற மாணிக்கப் பிள்ளையார்
அண்ணல் தன்னருள் அண்டியாம் வேண்டியே
கண்ணு தற்சிவன் காருண்ய சக்தியாம்
வண்ணத் தாள்புவ னேஸ்வரி போற்றுவாம்.

★

தீராத வினைகளெலாம் தீர்க்கும் சக்தி 1
வாராத செல்வமருள் உலக அன்னை
பாரோரும் விண்ணோரும் பரவி ஏத்தச்
சீரோங்கும் இடைக்காட் டில்கோயில் கொண்டாள்.

ஒளியாகி உயிராகி உணர்வரிய உயர்ஞான 2
வெளியாகி அன்பருளக் கோயில் மேவுந்
தெளிவாகித் தெவிட்டாத தெய்வ அன்னை
பொழிகின்றாள் இடைக்காட் டில்பே ரின்பமாரி.

பத்திக்கு வழிகாட்டும் பார்வ தித்தாய் 3
முத்திக்கு வித்தாகும் மூத்த அன்னை
எத்திக்கும் அருள்வீசி அடியார் வாழ்த்த
வித்தகர்வாழ் இடைக்காட் டில்வினை தீர்க்கின்றாள்.

அண்ட மெலாம் அருளாகப் பூத்தஅன்னை 4
கண்டனைய குரலில் இசைவாணர் போற்ற
பண்டைய வல்வினை களெல்லாம் பாறிப்போகத்
தண்டமிழ் சேர்இடைக் காட்டிற்பீடம் கொண்டாள்.

அடைகிலேன் தேவிகோயில் அன்புமீ தூரநின்று 5
விடையவன் பாகம்நண் ணும்விமலையை இதயம்வைத்துக்
கடையனேன் பாடல்செய் யேன்கரணங்கள் வழியேசென்று
மிடைகின்றேன் இடைக்காட் டம்மாஇரங்கிநீ அருள்செய்வாயே.

அம்மா அருட்சோதி அகிலாண்ட ஈஸ்வரியே 6
பெம்மான் பிறைசூடி பித்தன் சிவபெருமான்
செம்மான் கரத்தேந்தி செந்துவர் வாய்மேனியனாய்
இம்மா நிலம்புரத்தல் இடைக்காட் டின்அருள்மாட்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிசை வீணையர் யாழினர் சேர்ந்துன் 7
தண்ணளிக் கென்றும் தமிழிசை பாடுவர்
மண்ணினில் மறைவழி மாதவம் விழைவோர்
எண்ணுவர் புவனேஸ் வரிஅருட் பீடம்.

நித்தியமும் உன்னடியை நாடிப்பல் லடியார்கள் 8
பத்தியுடன் நெஞ்சுருகிக் கண்ணீர் மிகச்சிந்தி
துத்தியஞ் செயஅருளும் இடைக்காட் டுநாயகியே
சத்திசிவ சொருபநிலை தந்தெனைநீ ஆள்வாமி.

இந்திரன் இமையவர் ஏவரும் இறைஞ்சும் 9
சுந்தரி சுமங்கலி துரந்தரி நிரந்தரி
செந்தமிழ் நெஞ்சினர் சீரிடைக் காட்டினில்
வந்தனை உஞற்றிட வரந்தா தேவி.

திருவே உருவே திகழ் ஒளியே 10
அருவே உயிரே அருந் தமிழே
மருவே மணியே மரகத மேதெய்வ
அருளே புவனேஸ் வரி அன்னே.

ஓம் சக்தி

அம்பிகைதாசர்

## கற்பூர தீபம்

வெண்மையான கற்பூர வடிவம் போலவே ஆன்மாக்களும் இயல்பாகவே வெண்ணிற மான தூய தன்மையினைக் கொள்ளுதல் வேண்டும். கற்பூரமானது அக்கினி பற்றிய விடத்தே தன் வடிவமாக விளங்காது அவ்வக்கினியொளி மயமாக நிற்பதுபோல, ஆன்மா களும் பிருமஞானக்கினி பற்றியவிடத்தே மாயத்தன்மை நீங்கிப் பிரமத்துவம் விளக்க முற்று நிற்கும். பின்னர் அக்கற்பூரம் யாதோர் பற்றுமில்லாமல் தன் வடிவம் முழுதும் கரையப் பெற்றும் வானில் கலந்து அத்துவிதமாய் விளங்குதல்போல் ஆன்மாக்களும் தூல, சூட்சும, காரண உடல்கள் கரையப் பெற்று சகல பற்றுகளும் ஒழிந்து பரமாத்மாவுடன் கலந்து பேரின்பப் பெருவாழ்வை அடையும்.

இவ்வுண்மையை உணரவைத்த யுத்திக்கு ஏதுவான நற்குறியே கற்பூர ஆராத்தி.

அக்கற்பூர ஆராத்தியை இரு கரங்களாலும் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டால் சிறந்த ஆரோக்கியத்துடன் ஞானக் கண்ணும் உண்டாகும்.

## சிறந்த தீர்த்தம்

கங்கை நீர் சிறந்தது.
அதனினும் சிறந்தது அபிஷேக நீர்.
அதனினும் உயர்ந்தது ஏழைகட்காக உழைக்கும் உத்தமனுடைய முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர்.

ஸ்ரீ திருமுருக கிருபானந்தவாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சியில் காமாட்சி மதுரையில் மீனாட்சி

# இடைக்காட்டில் புவனேஸ்வரி

பண்டைத் தமிழகத்தின் சங்கத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவராகிய இடைக்காடனாரின் வழிவந்தவர்கள் வாழ்விடமாகக் கொண்டதும், வள்ளல் ஆய் வழி வந்தவர்களின் வளமார் வாழிடமான வளலாய் ஊருக்கும், கைத்தொழிலாலைகள் சூழ் தம்பாலையூருக்கும் இடையில் அமைந்து முல்லையும், மருதமும், நெய்தலும் மு ய ங் கி ச் செழிக்கும் இடைக்காடெனும் எழில் மேவும் ஊரின் மருத நிலத்தில், கார்கண்டு களிகொண்டு ஏர் கொண்டு வயலுழுது நீர் மல்கும் நன்னிலத்தில் பார் உய்ய நெல்விளைக்கும் பண்பார் உழவர் பெருமக்களின் குலதெய்வமாக, அருள் பாலிக்கும் அன்னை புவனேஸ்வரி கோயில் கொண்டருளுகின்றாள்.

நீறகலா நெற்றியும், இறை நினைவகலா நெஞ்சமும், தேறலெனவினிக்கும் செந்தமிழ் தவழும் நாவும் கொண்ட சைவத்தமிழ்ச் சான்றோர்கள், மாறுபடு சமயங்கள், மக்களைக் கூறுபோட இடமளியாது, ஏறுநடைபோட்டு ஏற்றமுடன் விருந்தோம்பி வேளாண்மை செய்துறையும் பெரும்பேறு பெற்றுயர்ந்த பொற்பதியெம் இடைக்காடு.

காடுதிருத்திக் களனியாக்கி, நாடு செழிக்க நல்லுழவுத் தொழில்பூண்டு, தொழுதுண்பின் செல்லாது, உழுதுண்டு, உலகுக்கு உணவளித்து, உயிர்காத்து, உலகத்தார்க்கு அச்சாணியாக என்ஞான்றும் ஏரால் ஏற்றம் பெற்றது எம்மூர்.

''ஆலயந் தொழுவது சாலவும் நன்று'' வேலையின் போதும் ஆலயந் தொழுதிட வசதியாக வயல் நடுவில் ஆலயம் அமைத்துச் சால்புடன் வாழும் சான்றோர் உடைத்து எம்மூர்.

பக்தி நெறிநின்று பரமனடி சேர்ந்தால் மட்டும் போதாது, புத்தியைத் தீட்டி புற உலகு புரக்கக் கற்றலின் அவசியத்தை உய்த்துணர்ந்த காரணத்தால், புவனேஸ்வரி அம்மனின் புண்ணியத்தால் புவனேஸ்வரி வித்தியாலயத்தை 1926ம் ஆண்டு தைத் திங்களில் சேர். பொன். இராமநாதன் முன்னிலையில் நிறுவிக் கல் நிறைந்த இடைக்காட்டை கல்வியில் சிறந்த ஊராக உருவாக்கினர் நம் முன்னோர்.

கல்வியையும், கடவுள் பக்தியையும் இருகண்களாகக் கொண்டு கண்ணியமும், கருணையும் உள்ளவர்களாக, கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுது வாழ்வதென்ற உண்மையை உணர்ந்தவர்களாக, உயிர்க்குறுகண் செய்யாத உயர்ந்த பண்புள்ளவர்களாக அன்பும் அறனும் போற்றி ஆலயந் தொழுது சால்புடன் வாழ்கின்ற சாந்தமும், சற்குணமும் நிறைந்த நம் மக்கள் குற்றவியல் வழக்குகளுக்காக நீதிமன்ற வாசலையே மிதித்தறியமாட்டார்கள்.

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற கோட்பாட்டைக் கொண்டொழுகும் காரணத்தால் குல தெய்வங்கள் குடிகொண்ட கோயில்கள் பல நிறைந்தது நம்மூர். மாணிக்கப் பிள்ளையார், பெரியதம்பிரான், கொட்டடி வைரவர், காளிதேவி சோதிவைரவர், முனீஸ்வரர் போன்ற பல குல தெய்வங்களுக்குக் கோயில்கட்டி, பொங்கலும் பூசையும் திருவிழாக்களும் குறைவின்றிச் செய்து நிறைவுடன் வாழ்கின்றனர் நம் மக்கள்.

பக்திக்குப் பல ஆலயங்களும் வித்தைக்கு ஒரு சைவ வித்தியாலயமும் கண்டதோடு திருப்தியடையாது, மக்கள் சேவையே மகேசன் சேவை யென்ற மனப்பாங்குடன் இடைக்காடு சனசமூக நிலையம், கலைமகள் சனசமூக நிலையம் என்ற இருசமூக நிறுவனங்களைத் தாபித்துப் பெரும்பணியாற்றுகின்றனர். விவசாயக் கழகங்கள், மாதர் மன்றங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம முன்னேற்றச் சங்கங்கள், இந்து நெறிக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்ற பல்துறை நிறுவனங்கள் மூலம், இளைய தலைமுறையினரின் ஆற்றல் அவம் போகாது ஆக்க வழியில் ஆற்றுப்படுத்துகின்றனர்.

ஊருணி நீர் நிறைந்தாற் போல ஊர் நடுவில் உயர்ந்த வித்தியாலயம் உருவான காரணத்தால் கல்லாதார் இல்லாத ஊராக மாட்சிமை அடைந்தது மட்டுமல்ல, இடைக் காட்டார் இல்லாத அலுவலகங்களே இல்லையென்று சொல்லுமளவிற்குப் பல்வகை உத்தியோகங்களையும் அலங்கரிக்கும் ஆற்றலைப் பெற்றுப் பெருமையுறப் புவனேஸ்வரி அம்பாள் அருள்பாலிக்கின்றாள்.

''யாழ்ப்பாணத்தில் தடக்கி விழுந்தால் ஒரு தமிழாசிரியர் மேற்றான் விழவேண்டும்'' என்று கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி கூறிய வார்த்தைகள் நூற்றுக்கு நூறு சதவீதம் இடைக்காட்டிற்கே பொருத்தமானதாகும்.

'கல்' பாறையை மட்டுமன்றிக் கற்றலையும் சுட்டி நிற்கும் காரணத்தால் கல் உடைத்துக் களனிகளை உருவாக்கிய கடின உழைப்பாளிகள் கல்வியையும் கஷ்டப்பட்டுக் கற்று, பல்துறை விற்பன்னர்களாகப் பெருமையுறப் பேரருள் பாலிக்கின்றாள் புவனேஸ்வரி அம்பாள்.

கல்வியால் உன்னத நிலையையடைந்தாலும் கல் தோண்டி உருவாக்கிய களனியை இடைக் காட்டான் ஒருநாளும் மறப்பதில்லை. அதனால் இடைக்காடு வாழ் மக்கள் நூறு வீதமும், விவசாயிகள் என்று கூறினால் அது மிகையாகாது.

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற உண்மையை நன்கு உணர்ந்தவர்கள் நம்மூர் மக்கள். நவீன விவசாய உபகரணங்கள் இல்லாத பண்டைக் காலத்தில் துலாப்பட்டையால் தோட்டத்திற்கு நீர் இறைப்பதற்கு கூட்டிறைப்பு முறையைக் கைக்கொண்டனர். அன்று தொட்டு இன்றுவரை விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட சகல தொழில்களையும் கூட்டுறவு முறையில் செய்கின்றனர்.

கூட்டுறவுப் பண்டகசாலை, ஐக்கிய நாணய சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்ற நவீன கூட்டுறவு அமைப்புக்கள் சிறப்புடன் விளங்குவதற்கு அடிப்படைக் காரணம் மக்களின் கூட்டு வாழ்க்கை முறையே.

கூட்டு வாழ்க்கையைக் குடும்ப வாழ்வாகக் கொண்ட மக்கள் தமது உற்பத்தியின் ஒரு பகுதியை ஆலயம், பாடசாலை, சனசமூக நிலையம் போன்ற பொது நிறுவனங்களுக்கு அன்பளிப்பாக ஆண்டு தோறும் ஒதுக்கி வைக்கும் பழக்கம் உடையவர்கள். இதனாற்றான் கோயில்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலை போன்ற பொது நிறுவனங்கள் எல்லாம் மக்களின் அன்பளிப்பாலும், சிரமதானத்தாலுமே கட்டி எழுப்பப்பட்டிருப்பதைக் காணலாம். பாடசாலை எல்லாம் அரசாங்க மயமாக்கப்பட்ட பின்புங்கூட பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு தமது உற்பத்திப் பொருளில் ஒருபகுதியை ஒதுக்கிக் கொடுக்கும் பெரும்பண்பு இடைக்காட்டில் மட்டுமே காணக்கூடியதாகும்.

இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்தும் பண்பு படைத்த காரணத்தால் இறக்குமதி உணவுப் பொருட்களை எதிர்பார்த்திருக்காமல் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுத் திகழ்வதற்கு அம்மனின் அருளே காரணமாகும். இடைக்காட்டு மக்களின் வீடுகளில் சாமி, குரக்கன், தினை, பயறு, உழுந்து ஆகிய உப உணவுப்பொருட்கள் இல்லாத நாளே இல்லை என்று பெருமையுடன் கூறக்கூடிய பாக்கியம் புவனேஸ்வரி புண்ணியத்தால் ஏற்பட்டதாகும். புவனேஸ்வரி அம்பாளின் புண்ணியத்தால் கடற்கரைக்கு அண்மையில் இருந்தும் நன்நீர் வளம் நிறைந்தது. நீரைக் குடித்துக்கொண்டே நிறைவாழ்வு வாழக் கூடிய மதிப்புடன் நம்மூர் விளங்குவதற்கு அம்மனின் அருளாலேயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஸ்தல விருட்சத்தின் கீழ் அமர்ந்திருக்கும் நாகதம்பிரான்**
*(இத் தல விருட்சம் 18-ம் நூற்ருண்டில் படிமத்தாரால் நாட்டப்பெற்றது)*



**கும்பாபிஷேகத் தினத்தன்று திருமுழுக்காட்டப் பெற்றவர்கள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவுலகக் கற்பகதருவான பனையின் பயன்களைப் பாங்குடன் பயன்படுத்தும் பண்புடைய வர்களாக நம் மக்கள் திகழ்கின்ற காரணத்தால் பனாட்டு, பதநீர், புழுக்கொடியல், பனங் கிழங்கு போன்றவற்றைத் தம் உணவில் சேர்த்துக்கொண்டு நோயற்ற வாழ்வு பெறவும் அம்மையருளே காரணமாகும்.

அம்மன் அருள் பெற்று அறவாழ்வு வாழ்கின்ற காரணத்தால் வெம்மை மிகுங் காலங் களிலும் அம்மை, கொப்புளிப்பான் போன்ற கொடிய தொற்று நோய்களுக்கு ஆளாவது மிக அரிதாகும். சேய்க்கு வரும் நோய்க்குத் தாய் மருந்துண்பது போல இடைக்காடு வாழ் மக்களுக்கு அண்மைக் காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாரிய சேதங்கள் ஏற் படாமல், அம்பாள் தானிருக்கும் ஆலயத்தின் பக்கம் தாக்குதல்களை ஈர்த்துக்கொண்டு இடைக்காட்டு மக்களை இரட்சித்த கருணையின் பெருமையை என்னென்று புகலுவேன்.

காஞ்சியில் காமாட்சியும், மதுரையில் மீனாட்சியும் இருந்து அருள்பாலிப்பதுபோல இடைக்காட்டில் புவனேஸ்வரி அம்பாள் அருளால் புவனேஸ்வரி வித்தியாலயத்தில் பாங்குடன் எண்ணும் எழுத்தும் கற்று, கற்றபின் அதற்குத் தக நின்று புண்ணியத் தாயாம் புவனேஸ்வரியின் பாதங்களைப் போற்றி உழைப்பால் உயர்ந்து, உயிர்களை ஓம்பி, உண்டி கொடுத்து உயிர்களைக் காத்து, உலகு போற்ற வாழ்வாங்கு வாழ்ந்து, பண்பால் உயர்ந்து, பக்தியால் பக்குவமடைந்து, அன்பும் அறிவும் உடையவராய் இல்வாழ்வில் பண்பும் பயனும் பெற்றுப் புவனேஸ்வரித் தாயின் பாதாரவிந்தங்களைப் போற்றி வாழ்வோம்.

பரிபாலன சபை

★

## அரோஹரா

சுவாமி பெரிய தெய்வமானதால் அவருக்கு மஹாதேவன் என்று பெயர். அன்று ஞானக் குழந்தையான ஞானசம்பந்தர் அவரை ஹர ஹர என்ற பெயரைச் சொல்லி ஓயாமல் வழிபட்டு வந்தார். அவர் ஊர்ஊராக ஹர ஹர என்று சொல்லிக்கொண்டு போவதைப் பார்த்து எல்லாச் சனங்களும் அரோஹரா என்று கோஷம் போட்டார்கள். அந்தக் காலத்தில் உலகத்திலிருந்த கெட்டதெல்லாம் அந்தக் கோஷத்தில் ஓடிப்போய் விட்டது.

வையம் (உலகம்) துயர் தீர்ந்தது. கஷ்டமே இல்லாமல் ஆயிற்று. என்றைக்கும் இதே மாதிரி ஹர ஹர சப்தம் எழும்பிக்கொண்டே இருக்கட்டும். அதனால் உலகத்தின் கஷ் டங்கள் எல்லாம் போகட்டும் என்று சம்பந்தக் குழந்தை தேவாரம் பாடிற்று.

''அரன் நாமமே சூழ்க
வையகமும் துயர் தீர்கவே''

அரன் என்றால் ஹரன், ஹரன் என்றால் சிவன். அந்தக் குழந்தை மாதிரியே பக்தி யோடு நாமும் ''நம பார்வதீ பதயே, ஹர ஹர மஹாதேவா'' என்று சொல்லுவோம்.

காஞ்சி முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி அம்மன் பொங்கல் மரபு

கண்ணகி கற்புத் தெய்வம். அவள் சேர சோழ பாண்டிய நாடுகளோடு கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னன் ஆண்ட சிங்கள நாட்டையும் இணைத்துக்கொண்ட தெய்வம். கண்ணகி வரலாற்றைக் கூறும் நூல் சிலப்பதிகாரம் எனப்படும். "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்று மகாகவி பாரதியார் அந்நூலின் சிறப்பினைப் பாராட்டுகின்றார். "கற்புக் கடன் பூண்ட இத்தெய்வமல்லது பொற்புடைத் தெய்வம் யாங்கண்டிலமால்" என்று சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ அடிகள் கண்ணகியைத் தெய்வமாகக் காண்கின்றார். இயல், இசை, நாடகம் என முத்தமிழும் விரவிய ஒரேயொரு தமிழ் நூல் சிலப்பதிகாரமாகும். கண்ணகியின் கற்புத் திறனைக் கண்டு கோயில் எடுத்தவன் இளங்கோவின் உடன்பிறந்தானாகிய அரசன் சேரன் செங்குட்டுவன் ஆவான். அவனே மூவேந்தர் நாட்டிலும் சிங்களர் நாட்டிலும் கண்ணகி வழிபாட்டுக்கு வித்திட்டவன். கண்ணகி வழிபாடு புத்த விகாரைகளிலும் பேணப்படுகின்றது. 'பத்தினித் தெய்யோ' என்று புத்த சமயத்தவரான சிங்களராலும் அவள் வணங்கப்படுகிறாள். இலங்கா தீவின் வடபாலுள்ள அங்கணாக் கடவை, மயிலிட்டி, இடைக்காடு, பச்சிலைப்பள்ளித்திரியாய், புங்குடுதீவு, வற்றாப்பளை முதலிய கடற்கரை ஓரமாகவுள்ள தலங்களில் கண்ணகித் தெய்வத்துக்குச் சிறப்பான விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

மானிடம், தெய்வமான வரலாறே கண்ணகி வரலாறு. முடிமன்னர் ஆட்சிக்கும், குடிமக்கள் வாழ்விற்கும் இடையிலுள்ள போராட்டத்தின் முதற் கட்டம் உலக வரலாற்றில் கண்ணகியாற்றான் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, உலகிலுள்ள அத்தனை குடிமக்கள் சார்பிலும் குரல் கொடுத்த கண்ணகி யாவராலும் வணங்கப்படவேண்டிய தெய்வம்.

இனி இடைக்காட்டுக் கண்ணகித் தெய்வத்துக்குப் பொங்கல் விழா நடப்பதைப் பற்றிச் சிறிது கூறுவோம். வற்றாப்பளை அம்மன் கோயிலுக்கு வைகாசி மாதத்தில் ஒரு திங்கட்கிழமையில் பொங்கல் விழா நடைபெறும். அந்தத் திங்கட்கிழமைக்கு முந்திய திங்கட்கிழமை இடைக்காட்டுக் கண்ணகிக்குப் பொங்கல் நடக்கும். பொங்கல் விழா அறிவித்தல் பறையறைந்து தெரிவிக்கப்படும். இவ்வறிவித்தல் அயலூர்களாகிய தொண்டைமானாறு, வளலாய், தம்பாலை, வரணன் கதிரிப்பாய்ஆகிய ஊர்களுக்கும் பறையறைந்தே அறிவிக்கப்படும். பொங்கலுக்கு வளந்துப்பானைகள் மூன்றுவாங்கப்படும். ஒவ்வொரு பானையும் ஆறு கொத்தரிசிக்குக் குறையாமல் வேகக்கூடிய பானையாயிருக்கும். வளந்துப் பொங்கலை வாழையடி வாழையாக மூன்று குடும்பத்தினர் செய்து வருகின்றனர். இந்த மூன்று பானைகளில் நடுவளந்து அல்லது நாயகவளந்து ஏனைய இருபானைகளிலும் பெரிதாயிருக்கும். வளந்துப்பானை மட்பாண்டம் என்பதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். வளந்துக்காரர் மூவரும் ஆசார சீலராய் ஒரு வாகனத்தில் வளந்துவாங்க நல்லதொரு நாளிலே கூடிப் போவார்கள்.

இப்பானை நினைத்தவுடன் வாங்கக்கூடிய பண்டமென்று நினைக்க வேண்டாம். மட்பாண்டம் வனைவோர் உடலும் உளமும் தூயராய் இருக்கும் நிலையிலேதான், இப்பானையைச் செய்வார்கள். சிறிய குறைபாடு இருந்தாலும் அது தன்னைத் தாக்குமென்று அத்தொழிலாளி கருதுவான். ஆதலால் ஒரு மாதத்துக்கு முன்னரே அவனுக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். பிறந்து ஏழு நாள்கூட முடியாத எங்கள் பிஞ்சுக் குழந்தையை எப்படிப் பேணமாய் தூக்கி வைத்திருக்கிறோமோ, அதிலும் பன்மடங்கு பேணமாய் வளந்துக்காரர், தங்கள் மணியாம் கற்புக்கரசி கண்ணகித் தெய்வத்தின் பானைகளை ஏந்தி வைத்திருப்பார். பூசாரிமாரின் இல்லங்களாகிய தர்மகலட்டி வளவிலோ அல்லது கச்சலாங்கலட்டி பூசாரியார் வளவிலோ புனிதமான ஓரிடத்தில் அவை வைக்கப்படும். பொங்கல் நாள் பகல் வேளையில் கண்ணகிக்குக் குடமுழுக்கும், திருவிழாவும் நடைபெறும். இரவு வேளையில் நடக்கும் பொங்கலில் மடைப் பண்டமெடுத்தல் என்னும் நிகழ்ச்சி முக்கியமானது. பூசாரியார் வளவில் கதிர்ப் பாய்கள் விரிக்கப்பட்டிருக்கும் ( குரக்கன் கதிர்களைக் காயவைக்கும் பாய் கதிர்ப்பாய் எனப்படும் ) · கதிர்ப்பாய்க்கு மேல் புற்பாய் விரிக்கப் பட்டிருக்கும். இந்த இடத்துக்கு மூன்று வளந்துப் பானைகளும் புதுக் கடகங்களிலே வைக்கப்பட்டுத் தூய வெண்ணிற ஆடையால் சுற்றப்பட்டுக் கொண்டு வரப்படும். அதன்பின் முக்கனிகளும் அரிசி முதலிய பண்டப் பொருட்களும் கொண்டுவரப்படும். பூசாரியார் தூப தீபங் காட்டியும் மந்திரத்தை உச்சரித்தும், அப்பானைகளைப் புனிதமாக்குவார். அதன் பின் விபூதிப் பிரசாதம் வழங்கப்படும். தமிழ் மறை ஓதி தேங்காய் உடைத்துக் கர்ப்பூரம் கொழுத்திய பின் அரகர ஒலியோடு மடைப்பண்டம் எடுக்கப்படும். வளந்துக்காரர் தத்தம் பானைகளைத் தூக்க வேண்டும். அதன் பின் மடைப்பண்டப் பொருட்களாகிய அரிசி, முக்கனி முதலியன தலைச்சுமையாக எடுக்கப்படும். மடைப்பண்ட மெடுப்போர் அப்பொருட்களை இடையிலே இறக்கி வைக்கவோ அல்லது வேறொருவரிடம் கைமாறலாகக் கொடுக்கவோ, வாகனத்தில் ஏற்றவோ கூடாது. பறை, தவில், நாதஸ்வரம் முதலிய இசைக் கருவிகள் ஒலிக்க, தீப்பந்தங்களோடு மடைப்பண்டம் செல்லும். மூன்று வளந்துகளுக்கும் மேலாப்பு வெள்ளாடை மேலாகப் பிடிக்கப்படும். மடைப் பண்டம் கொண்டு செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ஆலயத்தை அணுகியதும் மடைப்பண்டம் கொண்டு சென்றோரின் கால்கள் நீரூற்றி சுத்தமாக்கியபின் அவர்கள் புறவீதி, உள்வீதி எல்லாம் வலம் வருவார்கள். முதலில் நடுவளந்தே இறக்கப்படும். ஏனைய பானைகளும் மடைப் பண்டப் பொருட்களும் பின் இறக்கப்படும். பூசாரிமார் வீட்டில் நடந்த வளந்துக் கிரியைகள் போன்றவை ஆலயத்திலும் நடக்கும் உள்வீதியில் சுவாமி சந்நிதானத்தில் மும்மூன்று கற்கள் கொண்ட அடுப்பிலே பானைகள் ஏற்றப்படும். அடுப்பு மூட்டிய பின் பூசாரியார் ஒவ்வொரு பானைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதளவு பசுப்பாலும் அரிசியும் போடுவார். பொங்கல் முடிந்ததும் கண்ணகியின் திருவுருவின் முன் மடைப்பண்டம் வைத்தலும் பொங்கற் படையலும் நடைபெறும்.

வளந்துப் பொங்கலில் ஒரு பகுதி மருந்தெனக் கூறி வளந்துக்காரர் கோயிலில் வழிபடுவோர்க்கு வழங்குவார்கள். வளந்து பொங்கி இறக்கிய பின்தான் ஏனைய மக்கள் பொங்கலாம்.

கோயிலில் இருந்து ஏறக்குறைய கூப்பிடு தூரத்தொலைவில் சந்நிதானத்துக்குக் கிழக்குப் பக்கமாக செல்வச்சந்நிதி வீதியருகே வெளிமடை வெட்டுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். கண்ணகி அம்மனை வற்றாப் பளைக்கு வழியனுப்பும் சம்பிரதாயமாகவே இது கருதப்படுகிறது.

வெளிமடை நிகழ்ச்சிக்கு முன் பத்தினி தெய்வத்தைத் துதிக்கும் நோக்குடன் அவளை ஊஞ்சலிலே வைத்து ஊஞ்சற் பாட்டுக்கள் பாடுவார்கள். இவை இவ்வாலயத்தில் நடக்கும் பொங்கல் நிகழ்ச்சிகளாகும்.

முப்போதும் திருமேனி தீண்டும் முனிவர்களாகிய பூசாரிமாரின் அருட் பூசையால் எங்கள் அம்மையாகிய கண்ணகித் தெய்வம் அருளை வாரி வாரி வழங்குகிறாள். அதனால் இந்த ஊரும் வளர்ந்து வளர்ந்து வருகின்றது.

பரிபாலன சபை.

## விநாயகருக்கு முன் தலையில் குட்டிக்கொள்வதும் தோப்புக்கரணம் போடுவதும் ஏன்?

விநாயகர் அறிவு வடிவானவர், ''அறிவென்னும் கணபதியை அகத்துக் கொள்வோம்'' என்பது ஆன்றோர் வாக்கு.

புருவ நடுவிலிருந்து உள்நோக்கி ஒருகோடும், உச்சியிலிருந்து கீழ்நோக்கி ஒருகோடும் சந்திக்கும் இடம் அறிவிற்கு நிறைகலமாகும். மயங்கியிருக்கின்ற ஒருவனைத் தட்டுவதுபோல் ஞானவிநாயகரிடம் சென்று மயங்கிய அறிவைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டுச் சிரசில் குட்டிக்கொள்வதென உணர்க.

உடம்பு வளைந்து நிமிர்வதால் சுறுசுறுப்பு உள்ளவனுக்கு அறிவில் தெளிவு ஏற்படும். ஆகவே பிள்ளையார் திருமுன் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுகின்ற வழக்கத்தை முன்னோர்கள் வழிவழியாகக் கையாண்டு வருகிறார்கள்.

பிள்ளையார் முன் பயபக்தி விசுவாசத்துடன் குட்டிக்கொண்டு நன்றாக உட்கார்ந்து எழுந்து மூன்று முறை தோப்புக்கரணம் போடவேண்டும். இதனால் அறிவும் ஆக்கையும் நலம் பெறும்.

வாரியார்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதத்துவங்களும் சிவவரலாறும்

சிவம் என்னும் சொல்லின் பொருள் மங்கலம் எனக் கூறப்படுகின்றது. ஆனல் மணிவாசகர் தென்னுடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் என்று கூறுகிருர். சமணர்களும் தங்கள் கடவுளாகிய அருகனைச் சிவன் என்றும் முத்தி நிலையைச் சிவகதி என்றுங் கூறுவதைச் சமண நூல்கள் மூலம் அறியலாம். சமணர் செய்த சூடாமணி நிகண்டில் உயர் கதியாகிய முத்தி சைவம், சிவம் முதலிய பெயர்களால் கூறப்படுகிறது. இவற்ருல் சிவன் என்னும் சொல் உயர்ச்சி என்னும் பொருள் கொண்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

செமி (semi) என்னும் ஆங்கிலச் சொல் கெவி (heavy) என்று மாறுவது போல சிவன் என்ற சொல் 'கிவன்' என்றும் மாறலாம். இந்த 'கிவ' என்னுஞ் சொல் ஆங்கிலத்தில் உயர்த்தும் பொருளுள்ள 'கீவ்' (heave) எனக் காணப்படுகின்றது. இதற்கேற்ப சிவனின் இடம் கைலாயம், இமயம் முதலிய உயர்ந்த இடங்களாகவே கூறப்படுகிறது. கிரேக்கரும் தமது கடவுளரின் இடத்தை உயர்ந்த ஒலிம்பஸ் எனக் கூறுவர். இந்த கீவ் என்ற சொல்லிலிருந்து 'கெவின்' (heaven) என்னும் சொல் தோன்றி வானத்தையும் தெய்வத்தையும் குறிக்கும். இதற்கேற்ப சிவனும் எல்லாச் சக்திகளின் ஊற்ருக விளங்குகிருன்.

சக்தியே உலகம் என்கிறது விஞ்ஞானம், சிவமே சக்தி என்கிறது மெய்ஞானம். ஆகவே சிவமே உலகம் என்பதை நாம் இவற்றிலிருந்து அறியலாம். சிறிய அணுக்குண்டு ஒரு பெரும் தேசத்தையே விழுங்கும் மாபெரும் சக்தியாக மாறுவது போல, சிவமே எல்லாப் பொருள்களுமாகி நிற்பதால் இப்பொருள்கள் சக்தியாகி, அச்சக்தி சிவமாகும். எல்லாப் பொருள்களும் ஒடுங்கிய காலம் மகாசங்கார காலம் எனப்படும். இதனைற்ருன் சிவன் 'சுடலையாடி' எனப்படுகிருன்.

இந்த விஞ்ஞானத்தை எங்கள் முன்னேர்களும் அறிந்திருந்தார்கள் என்பதற்குக் கந்தபுராணத்தில் "எந்தை சத்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை முந்துபோல் ஒன்ருகிடும்," என்னும் அடிகள் தக்க சான்ருகும். இவற்ருல் சிவதத்துவம் என்பது உலகின் தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் என்பன வற்றுக்குக் காரணமான பராசத்தியின் தத்துவங்களின் ஊற்ருகிய பரம் பொருளின் தத்துவம் என்பதை அறியலாம். சத்தியே எல்லாச் சமய தத்துவங்களையும் கொண்ட பெருஞ் சமுத்திரம் என்று ஆன்ருேர்கள் கூறுவதை "நதியுண்ட கடலெனச் சமயத்தையுண்ட பரஞான ஆனந்தமுகிலே" எனத் தாயுமானவர் உமையம்மையாரை விளிக்கும் அடிகளால் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவற்றால் சிவதத்துவம், விஞ்ஞானம், தத்துவஞானம், மெய்ஞானம் ஆகிய எல்லா ஞானங்களுக்கும் ஊற்றாகிய மகாஞானத்தின் பிறப்பிடம் என்பதும் எந்நாட்டவர்க்கும் இறைவனை தென்னாடுடைய சிவனின் வரலாற்றை உயர்ச்சி என்னும் பொருளுள்ள 'சிவ கிவ, கெவின்' என்னும் சொற்களின் மூலம் மிக மிகப் பழைய காலத்திற்குரியது என்பதை நாம் அறியலாம். அக்காலம் தமிழ்மொழி வடமொழி ஆங்கிலம் முதலிய மொழிகள் எல்லாம் ஒரே மொழியாக இருந்த சிந்தனைக் கெட்டாத காலம் என மொழி வல்லுனர் கூறுவது ஏற்புடைத்து.

அறிவுலக மேதையும் தத்துவஞானியும் ஆகிய
நல்லூர் பண்டிதர். ச. இராமச்சந்திரன் அவர்கள்
(வெள்ளைஅண்ணை)


"ஓர் எழுத்து மந்திரத்தை ஓம் என்று சொல்லுவோம்
ஈர் எழுத்து மந்திரத்தை ராமா என்று சொல்லுவோம்
மூன்று எழுத்து மந்திரத்தை முருகா என்று சொல்லுவோம்
நாலு எழுத்து மந்திரத்தை நாராயணா சொல்லுவோம்
ஐந்தெழுத்து மந்திரத்தை நமசிவாய சொல்லுவோம்
ஆறெழுத்து மந்திரத்தை சரவணபவ சொல்லுவோம்
ஏழெழுத்து மந்திரத்தை ஸ்ரீராம்ஜெயராம் சொல்லுவோம்
எட்டெழுத்து மந்திரத்தை அட்டாட்சரம் சொல்லுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுந்தருளியாகிய கண்ணகி அம்மன்



நவக்கிரக நாயகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் புரக்கும் அன்னை புவனேஸ்வரி

அன்னமளித்து ஆருயிர்புரக்கும் 1
அன்னைபுவ னேஸ்வரியே
அன்னமளியென்று படிமத்தார்
வேலரிடம் வேண்டிவந்து
இன்னருளை எமக்கருள
இடைக்காட்டில் இடங்கொண்ட
உன்னடிகள் போற்றுகின்றோம்
உத்தமியே காத்திடம்மா.

இடைக்காட்டில் எழுந்தருளி 2
இன்னருளைப் பொழிபவளே
புவனத்தின் நாயகியே
புன்மைகளை அழிப்பவளே
புவனேஸ்வரித் தாயே
போற்றுகின்றோம் உன்பாதம்
கரு தணைப் பொழிந்திடம்மா
கதிமோட்சம் தந்திடம்மா.

மருதநில மத்தியிலே 3
மனிதகுலங் காத்திடவே
அருளாட்சி செய்கின்ற
அன்னைபுவ னேஸ்வரியே
மருள்நீக்கி அருள்கூட்டி
அடியாரின் துயர்போக்கி
பெருவாழ்வைத் தந்திடம்மா
சரணடைந்தோம் உன்பாதம்.

நீராடி நீறணிந்து 4
நிர்மலனுர் தேவிபதம்
ஆராத பக்தியுடன்
அனுதினமும் பூசிப்போர்
தீராத வெவ்வினைகள்
தீய்ந்து மறைந்திடவே
பாராளும் புவனேஸ்வரியே
பெருங்கருணை புரிந்திடம்மா.

நித்தமுன் திருக்கோயில் 5
வீதிவலம் வந்தடியோம்
பத்தியுடன் திருப்பாதம்
பாடிப் பரவுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தரையில் இன்பமுடன்
பரலோக நற்கதியும்
சத்திபுவ னேஸ்வரியே
தந்தருள்வாய் தயாபரியே.

அதிகார வெறியாலே 6
அகம்பாவம் கொண்டவர்கள்
அநியாயம் புரிகின்றார்
அழிவுகளைச் செய்கின்றார்
விதியோ நமக்கிதம்மா!
வேதனையால் புலம்புமெமை
கதியளித்துக் காத்திடம்மா
கலக்கத்தைப் போக்கிடம்மா.

வளலாயூர், செ. சிவசம்பு

சிந்தனைக்கு ...

ஒன்றே கடவுள். அவருக்கு ஒரு மாறுதலுமில்லை. ஓர் உருவமுமில்லை. நாம் அவரைக் காட்டும் கண்ணாடி. நாம் நேர்மையாகவும் தூய்மையாகவுமிருந்தால், கடவுளின் பிரதிவிம்பமும் அப்படிக் காணப்படும். ஆனால், நாம் கோணலாகவும் கெட்டவர்களாகவுமிருந்தால், அவருடைய பிரதிவிம்பமும் இத்தன்மைகளைக் காட்டும். ஆகையால் நாம் எல்லா வகையிலும் நேர்மையுடனும் தூய்மையுடனும் இருக்கக் கடப்பாடுடையோம்.

கடவுள் உள்ளத்திற் குடிகொண்டிருப்பதாகவும், அவ்விதம் இருப்பதை உணர்வதாகவுமுள்ள ஒருவனே வாழ்வாங்கு வாழ்பவன்.

சரியென்றும் தகுதியென்றும் யாம் கருதும் ஒரு செயலைச் செய்வதிலே எமது இன்பமும் மன அமைதியும் தங்கியுள்ளன. ஏனையோர் சொல்வதை அல்லது செய்வதைப் பின்பற்றுவதால் இவற்றையடைய முடியாது.

— மஹாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார் நால்வரில் இருவர் நமக்குக் கிடைத்தது இராவணனாலா?

சமணம், பௌத்தம், சாக்கியம் போன்ற பரசமயங்கள் தமிழ் நாட்டில் தலையெடுத்து சைவநெறியை அழித்தொழிக்க முற்பட்ட காலகட்டங்களில் பிறசமயத் தாக்கங்களிலிருந்து சைவத்தைக் காத்திட நாயன்மார் நால்வரையும் பூமியில் அவதரிக்கச் செய்தார் சிவபெருமான்.

நாயன்மார் நால்வரும் முற்பிறவியில் எப்படி இருந்தார்கள்? இவர்கள் இப்புவியில் பிறப்பெடுக்கவேண்டிய காரணம் என்ன?

திருஞானசம்பந்தர் ஞானக் குழந்தை. உமையம்மையாரின் திருமுலைப் பாலையே பருகும் பேறு பெற்றவர். மூன்று வயதில் முற்பிறப்பு ஞாபகத்தால் அம்மே! அப்பா! என்று ஓலமிட்டார். ஓடோடி வந்தனர் அம்மையும் அப்பருமாகிய உமாதேவியாரும் சிவபெருமானும். குழந்தையின் அழுகையை அடக்கப் பாலூட்டுமாறு பணித்தார் சிவன். ஞானப்பாலை ஊட்டினார் உமை. தந்தைக்குபதேசித்த தயாபரனே சம்பந்தராக அவதரித்ததாகக் கருதப்படுகின்றது.

ஆலாலசுந்தரர் திருக்கைலாய மலையில் சிவனடியார் கூட்டத்தில் ஒருவர். சிவபூசைக்காக மலர் பறிக்க நந்தவனம் சென்றார். அவ்வேளையில் பார்வதிதேவியின் பாங்கியர் அனிந்திதையும் கமலினியும் பூப்பறிக்கப் பூந்தோட்டத்தில் புகுந்தனர். ஆலாலசுந்தரரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த காரிகையர்மேல் காதல் கனிந்தது.

எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவராகிய சிவபெருமான் ஆலாலசுந்தரரின் அந்தரங்க ஆசையையும் அறிந்து கொண்டார்.

கண்வழியே கருத்தைச் செல்லவிட்ட ஆலாலசுந்தரர் ஆலமுண்ட கண்டனின் சந்நிதியை அடைந்த வேளை "ஆலாலசுந்தரா! நீ பெண்களை விரும்பியபடியால் மண்ணுலகிற் பிறந்து விரும்பிய மாதரை மணந்து இன்ப மனுபவிப்பாய்" என்று கூறினார் சிவன்.

அற்ப ஆசையால் ஆண்டவன் சந்நிதானத்தை இழந்துவிட்ட ஆலாலசுந்தரன் "எம்பெருமான் நான் உலகவாழ்க்கையில் மயங்கித் தடுமாறும் பொழுது அடியேனைத் தடுத்தாட்கொள்ள வேண்டும்" என வேண்டினார். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் எம்பிரான் ஆலாலசுந்தரரின் வேண்டுதலையும் ஏற்றுக் கொண்டார். அவர் வேண்டிய வரத்தையும் வழங்கினார். ஆலாலசுந்தரர் நம்பியாரூரராக இம்மண்ணில் பிறந்தார்.

'நாமார்க்கும் குடியல்லோம்' என்று நெஞ்சுறுதி நமக்களித்த நாவுக்கரசரும், ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிய மாணிக்கவாசகரும், இப்புவியில் பிறப்பெடுத்த காரணம் என்ன? முற்பிறவியில் எப்பிறப்பெடுத்திருந்தனர் என்ற அற்புதத்தை அறிய ஆவல் எழுகின்றதல்லவா?

இராவணன் சிறந்த சிவபக்தன். இலங்காபுரியை ஆண்ட இணையற்ற வீரன். பத்துத் திக்கிலும் பரந்துள்ள நாடுகளைத் தன் புயபலத்தால் கட்டியாண்டவன். அதனால் அகம்பாவம் கொண்டவன். சிலவேளைகளில் தான் பக்தியுடன் பணியும் சிவனையும் நிந்திக்கும் நாச புத்தியுள்ளவன்.

தன் புஷ்பகவிமானத்தில் ககன மார்க்கமாகப் பவனி வந்த இராவணனின் பாதையில் குறுக்கிட்டது எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் கைலாய மலை. பாதையில் குறுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்ட பாங்கிலுயர் மலையைப் பாறுங்கல்லெனத் தூக்கியெறியத் துணிந்தான். திருநந்தி தேவரின் ஆணையால் நின்ற புஷ்பகவிமானத்திலிருந்து இறங்கிக் கைலாயமலையைத் தூக்க முயன்றான் இராவணன்.

இராவணனின் அகந்தையை அடக்கச் சிவன் காற்பெருவிரலால் அம்மலையை அழுத்த அதனுள் அகப்பட்டு நசிந்த இராவணன் அழுது புலம்பினான்.

அவன் படுந்துயர் கண்டு மனம் இரங்கிய மாமுனிவர் வாகீசர் இசையினால் இறைவனை வசமாக்கலாம், சாமவேதம் பாடினால் கடவுளின் கருணையைப் பெறலாம் என்றார்.

இராவணன் தன் வீணையில் சாமகானம் மீட்டினான். இசையால் வசமான இறைவன் இராவணனை மன்னித்தார். ஊன்றிய பெருவிரலை எடுத்தார். இராவணன் விடுதலை பெற்றான். இராவணன் தன் தண்டனையைக் குறைக்க வழி கூறிய வாகீசரை நாவுக்கரசராகப் பிறக்கும்படி பணித்தார். வாகீசர் அப்பராக அவதரித்தார்.

ஆயிரம் வேதியர் ஆண்டவனை வேண்டி அருந்தவமியற்றினர். அவர்களுடைய தவத்தின் ஆற்றலையும், இறைபக்தியையும் சோதிக்க எண்ணிய சிவபெருமான் "நாம் இன்று இலங்கா புரியில் தவம் செய்யும் இராவணனின் மனைவி மண்டோதரிக்கு அருள் பாலிக்க அவ்விடம் ஏகுகின்றோம். நீங்கள் நமது சிவாகம நூலைப் பாதுகாத்துக்கொண்டு இங்கிருங்கள்" என்று கூறினார்.

இராவணனைக் கொடியவனாக, அரக்கனாக, பழிபாவத்துக்கு அஞ்சாதவனாகக் கருதும் வேதியர் அவனால் இறைவனுக்கு ஏதாவது தீங்கு விளைந்துவிடுமோ என்று வருந்தினர்.

எல்லாம் வல்ல இறைவனுக்கு இராவணனால் இன்னல் வருவதா? இல்லை! இல்லை! வேதியர் ஆண்டவன்பால் கொண்ட அன்பின் மிகுதியால் அவ்வாறு அஞ்சினர்.

இராவணனால் எனக்கு எவ்வித இன்னலும் ஏற்படாது. அப்படி ஏதாவது நேர்ந்தால் இங்குள்ள குளத்தில் தீச்சுடர் தோன்றும் என்று கூறி மறைந்தார்.

அருந்தவம் இயற்றும் மண்டோதரி முன் ஓர் அழகிய உருவுடன் இறைவன் தோன்றினார். அவ்வேளையில் தற்செயலாக அவ்விடம் வந்த இராவணன் அவ்வழகிய உருவத்தைக்கட்டி அணைத்தான்.

வேதியரைச் சோதிக்க விரும்பிய இறைவன் இராவணன் கட்டியணைத்தவுடன் திருவுத்தரகோசமங்கைக் குளத்தில் தீச்சுடரைத் தோன்றச் செய்தார். இராவணனிடம் அச்சம் கொண்ட வேதியர் உடனே தீப்பிழம்பில் குதித்தனர். ஒரேயொரு வேதியர் மட்டும் சிவாகம நூலைத் தாங்கியபடி தீப்பிழம்பில் குதிக்காமல் நின்றார். சிவாகம நூலைப் பாதுகாக்கும்படி கூறிய கட்டளையை அவர் ஒருவரே நிறைவேற்றினார். தீச்சுடரில் சிவாகம நூலுடன் குதித்தால் அது அழிந்துவிடும் என்று குதிக்காமல் நின்றார்.

திருவிளையாடல் புரிந்த சிவபெருமான் அவ்வேதியர் முன் தோன்றி "சிவாகமத்தைக் காப்பாற்றிய உமது பக்தியைப் போற்றுகிறோம். நீர் பூவுலகில் திருவாதவூரிற் பிறந்து சிவாகமப் பொருளைத் தோத்திரப் பாடல்களாகப் பாடி மக்களிடையே பரப்புக" என்று பணித்தார். அந்த வேதியர்தான் மணிவாசகராகப் பிறந்து ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தேனினுமினிய திருவாசகத்தைப் பாடியருளினார்.

இராவணன் இராட்சதன் என்றும் பார்க்காமல் அவன் படுந் துன்பத்திலிருந்து அவனை மீட்க வழி கூறிய வாகீசரும், இராவணனுக்கு அஞ்சாது சிவாகமத்தைக் காப்பதையே தன் தலையாய கடமையாகக் கருதிய வேதியரும் முறையே திருநாவுக்கரசராகவும் மாணிக்கவாசகராகவும் அவதரித்து நாயன்மார் நால்வரில் இருவர் நமக்குக் கிடைக்கக் காரணமாய் அமைந்தவன் இராவணன் என்று கூறினால் அது மிகையாகாது. அகந்தையால் அழிந்தவன் இராவணனாய் இருந்தும், அவன் சிவபக்தனாக விளங்கிய காரணத்தால் சைவ நெறி தழைத்தோங்க நாயன்மார் இருவரை நானிலத்துக்களிக்கும் பேறு அவனுக்குக் கிட்டியது. 'தீமையிலும் நன்மையுண்டு' என்பது திருவாக்கு.

திரு. வே. சுவாமிநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை

### காப்பு

ஆக்கும் தொழில் ஐந்து அரன் ஆற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கண நாயக வாரணமே.

★

கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெரியார் நிலை எண்ணில் அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க்கு எமனாக எடுத்தவளே
வற்றாத அருள்சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 1

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினைவற்று எளியேன் நின்றேன்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 2

முத்தேவரும் முத்தொழில் ஆற்றிடவே
முன்னின்று அருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாஸினியே சரணம்
தத்தேறிய நான் தநயன் தாய்நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு ததிக்கு இணைவாழ்வு உடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 3

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிரம்ப வளம் பொழி பாரோர்
தேன் பொழிலாம் இது செய்தவள் யாரோ
எந்த இடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவருக்கு அருள் எண்ணம் மிகுந்தாள்
மந்திர வேதமயப் பொருள் ஆனாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக் கிடையாக் கதியானவளே
கருதக் கிடையாக் கலையானவளே
பூணக் கிடையாப் பொலிவானவளே
புனையக் கிடையாப் புதுமைத்தவளே
நாணித் திருநாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 5

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதி ஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவ என்று அடியவர் குழும
அவர் அருள் பெற அருள் அமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 6


பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல் யாழ் மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 7

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராக விகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணீ
சாம்பவி சந்திர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்கிருத பூரணி
அம்ருத சொரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 8

வலை ஒத்த வீணை கலை ஒத்த மனம்
மருளப் பறையாறு ஒலி ஒத்த விதால்
நிலையற்று எளியேன் முடியத் தருமோ
நிகளம் ஆகளாக வரம் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்தானகோபாலர்



சண்டிகேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைவற்று அசைவற்று அநுபூதி பெறும்
அடியார் மிடிவாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே. 9

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எலாம் அடைவார்
சிவரத்தினமாய்த் திகழ்வார் அவரே.

சிந்தனைக்கு ...

தெய்வ சித்தமில்லாதவிடத்துப் பொருளோ மற்றும் நிபுணரான வைத்தியரோ எம்மைக் காப்பாற்ற முடியாது. ஆகவே, யாம் செய்யவேண்டியது யாது?

கடவுள் திருப்திப்படுவதற்குத்தான் நாம் நடக்க வேண்டும். போற்றுவதாயின் அவரையே போற்றவேண்டும்.

கடவுளால் வருந் துணையே உண்மையான துணை. கடவுளின் துணை யாரும் ஒருவர் வழியால் வரும். ஆகையால், முறிந்த நாணற் புல்லைப் போன்ற ஒருவரென அறிந்திருந்தும் அவரைத் துணையாய்க் கொள்ள நாடாதிருப்பாயாக.

யாரும் உன்னைப் பொய்யனென்றாலும், உன்னை விரோதித்தாலும் சினமெழாது காத்துக் கொள். ஏதுஞ் சொல்ல விரும்பினால் அமைதியுடன் சொல்லு. மௌனமே அப்போதைக்கு ஆகச் சிறந்ததாயிருக்கலாம். நீ உண்மை தவறவில்லையாயின், மற்றவன் உன்னைப் பொய்யனெனக் கூறுவதால் நீ பொய்யனாக மாட்டாய்.

கண்களை இழந்தவனல்ல குருடன். எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைக்கிறானோ அவனே குருடன்.

நீதியான இலட்சியத்தைக் கொண்ட முயற்சி ஒருபோதும் தோல்வியடையாது. சத்திய வாக்கின் பயனாய் எவரும் முடிவில் புண்படுவதில்லை.

தூயவுள்ளத்தாற் கூறிய சொல் என்றும் வீணாகாது.

மற்றவர்களிடம் உதவி கேட்டுப் போகும்போது தன் சுதந்திரத்தை விற்பது போலாகிறது.

மன அடக்கத்தை அதிகமாக உடையவர்களும், வேலையில் முழுக் கவனம் செலுத்தி நிற்போரும் மிகக் குறைவாகவே பேசுவர் பேச்சுக் கூடினால் செயல் குன்றும்; செயல் கூடினால் பேச்சுக் குன்றும். இயற்கையைப் பாருங்கள். இடைவிடாது தொழிலாற்றிக் கொண்டும், என்றுவது ஓய்வெடுக்காமலும், என்றும் மௌனமாகவுமல்லவா அது இயங்குகிறது.

— மஹாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீதேவி கருமாரி அம்மன் தோத்திரம்

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே. (கற்பூர)

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம் இருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார்இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி. (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னியவள் நீஇருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவளின் குரல் கேட்டுஉன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு. (கற்பூர)

கண்இரண்டும் உன்உருவே காணவேண்டும்
கால்இரண்டும் உன்அடியே நாடவேண்டும்
பண்அமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கை உனையே கூடவேண்டும்
எண்ணம் எல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண் அளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளையும் தீரும் அம்மா. (கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சில் உன்திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழ வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றம் எல்லாம் நீடூழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீஇருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா. (கற்பூர

அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ?
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமை இன்றிக் காவல் உண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தம் உண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான்உன்றன் பிள்ளையன்றோ? (கற்பூர)

அன்புக்கே நான் அடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவைஎல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும் (கற்பூர)

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்அதனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டில் ஆகவில்லை
செம்பவள வாய் அழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவும் இல்லை (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகிறாய்
கயறாகி உயிராகி உடலாகிறாய்
நேற்றாகி இன்றாகி நாளாகிறாய்
நிலமாகிப் பயிராகி உணவாகிறாய்
தோற்றாலும் ஜயித்தாலும் வாழ்வாகிறாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகிறாய்
போற்றாத நாள் இல்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை (கற்பூர)

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதி அணி சூலினி மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே!
கங்கண பாணியன் கனிமுகம் கண்டநல் கற்பகக் காமினியே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி! 1

கான் உறு மலர் எனக் கதிர் ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்;
தான் உறு தவஒளி தார்ஒளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்;
மான் உறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்;
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி! 2

சங்கரி! சௌந்தரி! சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே!
பொங்கு அரிமாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே!
எம்குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்தநல் துர்க்கையளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி! 3

தணதண தந்தண தவில்ஒலி முழங்கிடத் தண்மணி நீவருவாய்;
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீவருவாய்;
பணபண பம்பண பறைஒலி கூவிடப் பண்மணி நீவருவாய்;
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி! 4

பஞ்சமி, பைரவி, பர்வத புத்திரி, பஞ்சநல் பாணியளே!
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்தநல் குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமர் அது செய்தநல் சக்தி எனும் மாயே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி. 5

எண்ணியபடி நீ அருளிட வருவாய் எம்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்;
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி! 6

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்;
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்;
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி! 7

ஜெய ஜெய பாலா! சாமுண்டேஸ்வரி! ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய துர்க்கா! ஸ்ரீபரமேச்வரி! ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய ஜெயந்தி! மங்களகாளி! ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி! 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

# அபிஷேகத்தின் மகத்துவம்

கோயில்களில் மூல விக்கிரகத்திற்கு நாள்தோறும் அபிஷேக ஆராதனைகள் நடக்கின்றன. தண்ணீர், எண்ணெய், பால், தேன், தயிர், விபூதி போன்ற பொருட்களைக் கொண்டு அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்தால் மூல விக்கிரகத்தின் மின்கடத்தும் திறனை அறிய முடிகிறது. இதன்மூலம் காற்று மண்டலத்தில் எதிர் மின்னூட்டம்; (Negative ion, Concentration) அதிகரிக்கிறது.

காற்று மண்டலத்தில் அதிகரிக்கப்படும் எதிர் மின்னூட்டங்கள் வீணானவையல்ல. நவீன விஞ்ஞான யுகம் இதை உயிர் வாழ்விற்கு இன்றியமையாதவை யெனக் குறிக்கின்றன. இதற்காக இந்த எதிர் மின்னூட்டங்களைப் பெறுவதற்காக கடற்கரைகளுக்கும், மலை வாசஸ்தலங்களுக்கும், அருவிக் கரைகளுக்கும் செல்லும்படி அறிவுரை கூறுகிறது. ஆனால் நம் முன்னோர்களும் நம் இந்துமதமும் இப்படிப்பட்ட உயிர் வளர்க்கும் பணியை ஆலயங்களைக் கொண்டே உருவாக்கிவிட்டனர். இது மட்டுமா......?

ஈரப்பதமுள்ள காற்று மண்டலத்தில் பிராணவாயு அழுத்தம் அதிகரிக்கிறது. (Oxygen Tension) இதனால் பிராணவாயு மூலக்கூறுகள் அதிக அளவில் கிடைக்கின்றன. இந்தச் சூழ்நிலை உடல் நலத்தைப் பெருக்குகிறது. இது விஞ்ஞானம்.

எதிர் மின்னூட்டமும், ஈரப்பதமும் உள்ள காற்றுமண்டலம் கர்ப்பக்கிரகத்துள் அமைந்துள்ளது. அதனுள் 'ஓம்' ஒலியுடன் அர்ச்சனை செய்யும்போது அவ்வோசை விக்கிரகத்தில் பட்டு எதிரொலிக்கிறது. இதனால் காற்றுமண்டலம் பெரும்அலையும் ஒத்ததிர்வும் (Maximum Amplitude at Resonance) பெறுகிறது. இதன்மூலம் அயனியாக்கப்பட்ட மூலக்கூறுகள் அங்கு குழுமியுள்ள பக்தர்களை அடைகிறது. அவர்களுடைய உள்ளத்துக்கும் உடலுக்கும் இதனால் நன்மை விளையும் என்பது விந்தையல்ல, விஞ்ஞானம் கண்டுவிட்ட முடிவாகும்.

ஆலயங்களுக்குச் செல்பவர்கள் மேலே கூறப்பட்ட பலனைத் தொடர்ச்சியாகப் பெற வேண்டுமென்பதற்காகவே அபிஷேகங்கள் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் விக்கிரகத்தில் மின் அதிர்வுகள் தொடர்ந்து ஏற்படுகின்றன. இவை அம்மூலவிக்கிரகத்திற்கு அடியில் பதிக்கப்பட்டுள்ள யந்திரங்களில் சேமிக்கப்படுகின்றன.

சுருக்கமாகக் கூறுவதானால் ஆலயத்திலுள்ள கற்பக்கிருகம் ஓர் ஒத்ததிர்வுக் கலமாகவும் (Resonator), மூலவிக்கிரகம் ஒலி அலைகளின் எதிரொலிப்பானுகவும் (Reflector of Sound), மூல விக்கிரகத்தின் கீழேயுள்ள யந்திரத் தகடு ஆற்றலைச் சேமிக்கும் கலமாகவும் (Storer of Energy). அயனியாக்கப்பட்ட காற்றுமண்டலம் ஆற்றலைக் கடத்தும் பாதையாகவும் (Medium of Energy Transfer), அங்கே வழிபடுவோர் ஆற்றலை ஏற்பவராகவும் (Receiver) விளங்குவதை அறியலாம்.

எனவே, இந்து சமயத்தின் ஆலய வழிபாடு விஞ்ஞானப் பாதையில் மெஞ்ஞானத்தைப் படைக்கும் சிறந்த சாதனம் என்பது தெளிவு.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை

# சங்காபிஷேகம்

புகழ் பெற்ற ஆலயங்களில், பல சமயங்களில் நூற்றெட்டு முதல் ஆயிரத்தெட்டுச் சங்குகளில் நன்னீர் நிரப்பி, அதனை முறைப்படி பூசித்து, அந்நீரைச் சிவனுக்கோ விஷ்ணுவுக்கோ அபிஷேகம் செய்வதைச் ''சங்காபிஷேகம்'' என்கின்றோம்.

இவ்வபிஷேகம் நடத்தும் முறைகளைக் கவனித்தால் இதற்கும் மனிதஇனத்திற்கும் உள்ள தொடர்பு,அதனுல் ஏற்படும் நன்மைகளும் இதனுட் பொதிந்து கிடப்பதை அறியலாம்

## சங்குகள் வைக்கும் முறை

108 அல்லது 1008 சங்குகளையும் இறைவன் திருச்சந்நிதியில் பன்னிரண்டு இராசி குண்டங்களாகப் பிரித்து ஒவ்வோர் இராசி குண்டங்களிலும் ஒன்பது சங்குகள் வீதம் பன்னிரண்டு இராசியிலும் 108 சங்குகள் வைத்து எட்டுத் திக்குகளுக்கும் எட்டுப் பிரதான சங்குகளையும் நடுவில் வலம்புரி, இடம்புரி இருசங்குகளையும் 'சிவசக்தி' என அமைத்தல் வேண்டும்.

வலம்புரி, இடம்புரி சங்குகளைச் சுவாமியும் அம்பாளுமாகப் பாவித்துப் பிரதிட்டை செய்தல் வேண்டும்.

இவ்வாறு அமைக்கப் பெற்ற 118 சங்குகளிலும் 1 + 1 + 8 = 10 = 1 எல்லாம் ''ஒருவனே'' என்ற தத்துவப்படியும் அமைத்தல் வேண்டும்.

உடம்பின் அமைப்புப்படி குடத்தில் தேங்காய் தலையாகவும், தர்ப்பை முடிகள் தலைமயிராகவும், மாவிலைகள் அவயவங்களாகவும், வெள்ளை நூல் நரம்புகளாகவும், வர்ண நூல் எலும்புகளாகவும், தசைகளாகவும், நிரப்புகின்ற நன்னீர் இரத்தமாகவும், பாவிக்கின்ற தத்துவப்படி இரண்டு வெள்ளிக் குடங்களில், நன்னீர் நிரப்பி, அவற்றில் கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, விளாமிச்சி வேர், ஏலம், பன்னீர், மஞ்சள் முதலிய வாசனைத் திரவியங்களைச் சேர்த்து, ஒவ்வொரு சங்கிலும் மாவிலை, தர்ப்பை மலர் வைத்து யாக குண்டத்தின் எதிரில் அமைத்தல் வேண்டும்.

## பூஜை முறை

சங்குகள் ஒவ்வொன்றும் ஓம், ஓம் என்று ஒலித்துக் கொண்டிருக்கும். இவை யாக குண்டத்தைச் சுற்றி ஐந்து நாழிகை நேரம் ''ஓங்கார'' மந்திரம் செபிக்க, அம் மந்திரம் தீர்த்தத்தில் கலக்கின்றது. தர்ப்பைப் புல் மூலம் தெய்வசக்திகளையும் மாவிலையில் உள்ள துவர்ப்புச் சக்தியையும் தீர்த்தம் ஈர்த்துக் கொள்கின்றது. வேதசாத்திரங்களின் செப மந்திரங்களும் ஓதி ஒவ்வோர் ''இராசி'' மண்டலத்திற்கும் எட்டுத்திக்குகளில் உள்ள சங்குகளும், வலம்புரி, இடம்புரி சங்குகளும் முறையே பூசைகள் செய்தல் வேண்டும்.

அதன் பின்னர் (யாக குண்டத்தில்) வேள்வி மண்டபத்தில் ஆகவனீயம், தட்சிணுக்கினியம், காருளாபத்தியம் என்னும் முத்தியை முறையே ஆல், அரசு, அத்தி, மா, பலா, வெள்ளெருக்கு, வன்னி, நாயுரிவி, தர்ப்பை, முதலிய சிப்பிகளால் வளர்த்து, நாவதானியம், வாசனை திரவியம், கனிவகை, தேன், தேங்காய், பீதாம்பரம், இலவங்கம், தாம்பூலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொரி முதலியவற்றோடு நறுநெய் தாரையாகப் பெய்து ஒரே சோதிப்பிழம்பாக அருட் பெருஞ் சோதி, தனிப்பெருங் கருணைக் கடவுளுக்கு அக்கினி மூலமாகக் கொடுத்துப் பலிபோட்டு, காரி யாக்கினியிலிருந்து மூலாக்கினியாகிய இரு சங்குகளிலும் பிரதிட்டை முடித்து தூபதீப நிவேதனம், கற்பூராரார்த்தி முதலியவற்றைச் செய்து வாத்தியங்களோடு பிரகாரவலம் எழுந்தருளச் செய்து உலகம் தீங்கின்றி உய்யும் பொருட்டு வேண்டிக் கொண்டு ஆசிபெற்று ஒவ்வொருசங்கு தீர்த்தத்தாலும் இறைவனை முறையே அபிஷேகம் செய்வித்தல் வேண்டும்.

தொடர்ந்து பல தீபங்கள் ஏற்றி, கண்கவர் அலங்காரங்கள் செய்து தூப நவக்கிரக அலங்கார தீபத்தால் பஞ்சபூதம், பஞ்ச இந்திரியம் (ஐம்புலன்கள்) ஐந்து முகங்களுக்கு பஞ்சமுக தீபாராதனையாக, சீவன்கள் சுகவாழ்வு பெற வேண்டி கற்பூராரார்த்தி முதலிய மங்களகரமான ஆராதனைகள் செய்தல் வேண்டும்.

## வழிபாடும் பயனும்

இச்சங்காபிஷேகத்தை மக்கள் கண்டுகளித்து வருகின்றனர். இதனைக் கண்டு இறைவனை வழிபடுகின்றவர்கள் எல்லாப்பேறும் பெற்றுப் பெருவாழ்வு நிறைவதற்கு சங்கு தீர்த்தம் பெற்று உட்கொண்டும், தலைமீது தெளித்தும் வருகின்றனர்.

நம் முன்னோர்கள் உடம்பையும் உள்ளத்தையும், உள்ளுறையும் பஞ்சபூதங்களையும் புனிதமாக்கும்பொருட்டு இச்சங்காபிஷேக வழிபாட்டு முறையை வகுத்துள்ளனர்.

மருத்துவ குணங்கள் நிலையின்படியும், காலசக்கர சுழற்சியின் படியும் கார்த்திகை மாதம் தேள்போன்ற விருட்சிக இராசியில் பிரதான கோள் சூரிய கிரகம் சஞ்சரிக்கும் காலமாகும். தட்பவெப்ப நிலையில் மாறுபட்டு, மழை, குளிர் காரணமாக வெப்பநிலை இல்லாது நச்சுக்கிருமிகள் வளர்ச்சியால், மக்களின் உடற்கூறில் வேறுபாடுகள் தோன்றிப் பற்பல நோய்கள் அணுக வாய்ப்புண்டாகின்றது. எவ்விதப் பிணியும் நேராதிருக்கும்படி முன்னேற்பாடாக அதனைத் தவிர்க்க ஒவ்வொரு சோமவாரமும் சங்காபிஷேகம் செய்து வந்தனர். இதனால் குளிர் நோய்கள், ஜலதோசம், இருமல், சுரம், பேதிகள் அணுகா என்று நம்பியிருந்தார்கள். உயிரினங்கள் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை. சீவனாகிய சிவன் அனைத்திலும் குடிகொண்டிருக்கிறார். சிவனுக்குச் செய்வதனைத்தும் மக்களையும் சார்ந்து நலம் பயக்கும் என்பதாலும், சிவனே சீவனாகும் என்ற திருமூலர் வாக்கின்படியும் கொண்டு, சங்காபிஷேகத்தைச் சிறப்பாக நடத்திவருகின்றனர்.

கால முறைப்படியும், மருத்துவ அடிப்படையிலும் அனுபவமுறையாலும், சங்குகளில் நிரப்பும் நன்னீரிலே கலக்கப்பட்ட திரவியவகைகள், கோரோசனை, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, சந்தனம், புனுகு, சவ்வாது, அந்தர், விளாமிச்சை வேர், சாம்பி ராணி, பன்னீர், பலவிதப்பச்சிலை, மலர்கள், தர்ப்பை முதலியவற்றின் குணநலன்களா லும் இச்சங்கு தீர்த்தத்தை மக்கள் பருகியும், தெளித்தும் குடல் சம்பந்தமான எவ்வித நோயும் வராமல் காக்கவும், சித்தவைத்திய முறையையும் எண்ணிச் சங்காபிஷேகத்தைச் செய்து வருகின்றனர்.

உலக நலத்திற்காக, மனித நலத்திற்காக மேற்கொள்ளப்பட்டு வந்த இச்சங்காபிஷேகத் திருவிழாவை ஆண்டுதோறும் திருக்கோயில்களில் பெருவிழாவாக நடத்திவருகின்றனர். இவ்வபிஷேக விழாவினைக் கண்டு களித்து அபிஷேகத் தீர்த்தத்தைப் பருகி நலம்பெறப் பெரும் பாக்கியமாக எண்ணி, உள்ளம், உடல் அனைத்தையும் புனிதமடையச் செய்து அம்மையப்பரின் பேரருள் பெற்று இம்மையிலும் மறுமையிலும் பேரானந்தப் பெருவாழ்வு அடைவோமாக.

— புலவர் செந்துறை முத்து
"திருப்பூர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஒருவன் நல்ல தீர்மானத்தை (அதாவது சங்கற்பத்தை) த்தானும் செய்யாதிருக்கலாம். ஆனால் தீர ஆலோசித்து ஒரு தீர்மானத்தை மேற்கொண்டால், அதனை என்றுவது நெகிழ விடாதிருப்பானாக.

இலட்சியத்தை அடைவதற்கு விடாமுயற்சி செய்தால் மாத்திரம் நாம் இலட்சியமுடையோ மெனலாம்.

தன்னுடைய குற்றங்களை மறந்துவிட்டுப் பிறருடைய குற்றங்களைப் பார்ப்பது மனிதனிடம் பழக்கமாயிருக்கிறது. இப்பழக்கத்தின் பயனாய் அவன் ஈற்றில் துன்பமடைவது திண்ணம்.

பயனற்ற காரியங்களைப் பேசாதும், பயனுள்ளவற்றைச் சுருக்கமான சில சொற்களில் நல்ல விளக்கந் தருவனவாய்ப் பேசியும் வருவோமாயின், எங்கள் நேரத்திலும் பிறருடைய நேரத்திலும் மிச்சப்படுத்துவோம்.

– மஹாத்மாகாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
ஓம் சக்தி

# கண்ணகி அம்மை திருஊஞ்சல்

## காப்பு

சீர்மேவு யாழ்ப்பாண தேயந் தன்னில்
திகழ்தருசீர் இடைக்காடாம் பதியி லுற்ற
பேர்மேவு நல்லிகப்பன் வயலில் வாழும்
பெருமைபெறு கண்ணகிமேல் ஊஞ்சல் பாட
ஏர்மேவு பிரணவமே மூர்த்த மான
எழிலொடுகொள் தேகமதை யாவர்க்குங் காட்டக்
கணபதிதன் னிருசரணம் காப்ப தாமே.

## நூல்

சுந்தரஞ்சேர் பவளத்தால் கால்கள் நாட்டி 1
சோதிகொளும் வயிரத்தால் விட்டம் மாட்டி
நந்தலிலா மாணிக்கப் பலகை கூட்டி
நாரமுறு பவளத்தாற் கயிறு பூட்டி
சந்தமுறு சித்திரங்கள் பொலியத் தீட்டி
தகைமைபெற இயற்றியிடும் ஊஞ்சல் வைகி
நந்துதவழ் நல்லிகப்பன் வயலில் வாழும்
நன்மைதரு கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

பூவுலகிற் கற்புநிலை நிறுத்த வேண்டிப் 2
புண்ணியத்தால் வந்துதித்த பூவை போலும்
நாவுநவில் மொழியுடைய நங்கை யேநின்
நளினமலர்ப் பதம்போற்றும் மடவார் தங்கள்
தேய்வுபெருக் கற்பதனைச் சிதைக்க வெண்ணும்
சிறியர்இவ்வா றலைவரெனக் காட்டல் போலும்
காவிசெறி நல்லிகப்பன் வயலில் வாழும்
கருதரிய கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

குவலயமீ தடிஅளந்து கொண்ட தாலும் 3
கோவடர்த்த செயலாலுங் குடிலின் மீதே
தவளமுடி தொடஎழுந்த செய்கை யாலும்
சந்திரன்நேர் போதிமர நிழலின் கீழே
பவளஇதழ் உடையபசுந் தோகைச் சாயல்
பன்மலர்சேர் அழகவல்லி போல வாய்ந்தே
புவனமிகு நல்லிகப்பன் வயலில் வாழும்
போற்றவரும் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கைமிகு காளிகணம் கவிதை தாங்க 4
சாங்கவிதன் திருக்கரத்திற் கவரி வாங்க
துங்கமலர் மாதர்கையில் வட்டம் தூங்க
துந்துபியா தியவாத்தி யங்கள் ஏங்க
பங்கமில்விஞ் சயர்மாதர் கீதம் வீங்க
பண்ணவர்தம் மகளிர்கரம் மலர்கள் ஏந்த
கங்குசெறி நல்லிகப்பன் வயலில் வாழும்
காட்சிதரு கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

நெஞ்சாதி கரணங்கள் தூய்மை யாகி 5
நித்தலும்உன் திருநாமம் நாவிற் சொல்லிப்
பஞ்சாதி பெறும்அடியை உளத்தில் உன்னிப்
படியதனில் எட்டுறுப்பும் படிய வீழ்ந்தே
அச்சோதி வடிவான அம்மை யேஉன்
அருள்தருவாய் எனஅடியார் மருங்கில் நிற்க
செஞ்சாலி நல்லிகப்பன் வயலில் வாழும்
செவ்வியுறு கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

சரணமதில் பொலிவுபெறும் தண்டை யாட 6
தங்கவளை யுடன்சரியும் தனிக்கை யாட
வருணமுறு பதக்கமுயர் மார்பி லாட
அங்கதமும் புயமதனில் கிளர்ந்தே யாடத்
தருணமிகு குழையினுடன் தோடு மாடத்
தனிக்குழலும் அவிழ்ந்துபுறத் தேங்கி யாட
கருணைமிகு நல்லிகப்பன் வயலில் வாழும்
காசில்திருக் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

மாதுமையம் பகமதினில் வந்து தோன்றி 7
மாங்கனியின் உட்புகுந்து பேழை வைகி
தீதில்வணி கன்மனையாய் இடைச்சி சேர்ந்து
செழியனையும் மாள்வித்துச் சேது மூழ்கி
மேதகுசீர் தனைஉலகில் மிகவு மாக்கி
மேதினியோர் துயரதனைப் போக நீக்கி
காதலொடு நல்லிகப்பன் வயலில் வாழும்
கயற்கண்ணுறும் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

கடைசியர்தம் அளகமதை முகிலென் றெண்ணிக் 8
களித்துஅவர்தம் சாயலினால் இனமென் றேங்கி
புடைதிகழும் அல்குல்தனைப் போகி யென்றே
பொறிகிளர வெகுண்டணுகி நாசி நோக்கி
அடர்பகையாம் ஒந்தியென மயில்கள் அஞ்சும்
அணிகிளரும் மலர்கள்செறி சோலை சூழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைவிரவு நல்லிகப்பன் வயலில் வாழும்
மாமணியே கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

தங்கமதி நணியவரே ஆடீர் ஊஞ்சல் 9
தாசருளம் நணியவரே ஆடீர் ஊஞ்சல்
புங்கவர்போற் றடியவரே ஆடீர் ஊஞ்சல்
பொன்னுலாம் அடியவரே ஆடீர் ஊஞ்சல்
பங்கமிலாக் கொங்கையரே ஆடீர் ஊஞ்சல்
பசுங்குழலிற் கொங்கையரே ஆடீர் ஊஞ்சல்
சங்கைமிகு நல்லிகப்பன் வயலில் வாழும்
சாயல்மயிற் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

வாழி

மேதகுநான் மறையவர்கள் பசுக்கள் வாழி 10
மேன்மைபெறும் முகிலினங்கள் பலவும் வாழி
தீதகலும் அடியார்கள் நிதமும் வாழி
திருநீறும் அஞ்செழுத்தும் வடமும் வாழி
மேதகைய வேந்தர்செங் கோலும் வாழி
மெல்லியர்தம் பொருவிலுயர் கற்பும் வாழி
காதலொடு நல்லிகப்பன் வயலில் வாழும்
கற்புமிகு கண்ணகியே வாழி வாழி

எச்சரிக்கை

சீர்த்தம்பையில் நல்லிகப்பனை திகழ்வாய் எச்சரிக்கை 11
திருமாங்கனி தனில்வந்த கரும்பே எச்சரிக்கை
தேராநெறி தெரிவித்திடும் தேவீ எச்சரிக்கை
திரையாழியில் வருபேழையில் வருவாய் எச்சரிக்கை
பேரார்மலர்க் குழல்மேவிய பரையே எச்சரிக்கை
பெருமாமணி பொதியுஞ்சிலம் பணிவாய் எச்சரிக்கை.

பராக்கு

மறைபரவு கற்புடைய மாதே பராக்கு 12
மரைமலரை வென்றமுக தேசாய் பராக்கு
பிறைமருவு நுதலுடைய பெரியாய் பராக்கு
பேசுமொழி அமுதனைய கண்டீ பராக்கு
கோவலனைத் தெய்வமெனக் கொண்டாய் பராக்கு
கூடல்தனை எரித்தமலர்க் கொம்பே பராக்கு
நாவலர்கள் புகழ்கின்ற நங்காய் பராக்கு
நண்ணலருக்கு இடியன்ன நாவாய் பராக்கு
திருமகளை வென்றஎழில் தேவீ பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐசயமன கொங்கைகொளும் உரத்தாய் பராக்கு
தாசர்தமக் குறுதிசெயும் வரத்தாய் பராக்கு
பலவளமார் இடைக்காட்டில் உறைவாய் பராக்கு
பகர்கிரியாம் செங்கோட்டுப் பதியாய் பராக்கு
அலைமருவு வற்றுப்பளை அமர்வாய் பராக்கு
ஆபன்றி யானபதி அணங்கே பராக்கு.

**மங்களம்**

1. சித்திபுத்தி நாயகற்கு மங்களம்—சிவன்
தேவியுமை சேந்தருக்கும் மங்களம்
அத்திபுக்க கண்ணகிக்கு மங்களம்—புகார்
அணைந்தவணி கன்மகட்கு மங்களம்.

2. பாடல்வரி பார்த்துவந்தாய் மங்களம்—நல்ல
பாங்கிஐயை மனையிருந்தாய் மங்களம்
கூடல்நகர் கூடவந்தாய் மங்களம்—மன்னன்
கோல்வளைய நேர் நிமிர்ந்தாய் மங்களம்.

3. செங்கோட்டில் சேணடைந்தாய் மங்களம்—பணி
சேரமன்னன் கோயிலுற்றாய் மங்களம்
எங்காட்டூர் எய்தினையே மங்களம்—என்றும்
எங்களனை கண்ணகிக்கு மங்களம்

மங்களம் ஜய மங்களம்; மங்களம் சுப மங்களம்.

நவாலியூர், திரு. க. சோமசுந்தரப் புலவர்

சிந்தனைக்கு...

"பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின் பாவம் செய்பவரும் இலர். ஆதலால், பாவஞ் செய்பவர்களிலும் அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்."

- ஆறுமுகநாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணகை



வைரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## இடைக்காடு புவனேஸ்வரி கோவில் பிரகாரத்தில் எழுந்தருளி இருக்கும் கண்ணகி அம்மை பேரில் பாடப்பட்ட

# ஊஞ்சல் பாடல்கள்

### காப்பு

திரு மேவும் தமிழ் ஈழநாட்டுக் கேய்ந்த
சிரம் பொருவும் இடைக்காடாம் செல்வ ஊரில்
உரு மேவும் வான் உறையும் உம்பர் போல
உயர் குணத்த மக்கள் எல்லாம் உவந்து வாழ
கருமேதி கயம் படிந்து கரையில் ஏறி
கரும்பு அருந்தும் கழனி சூழ் தளியில் வாழும்
கருணைளும் கண்ணகித்தாய் ஊஞ்சல் பாட
கரிமுகத்துப் பெருமானுர் காப்புத் தானே.

❀

1. சீர் பொருந்து பவளங்கள் கால்கள் ஆக
திகழ் தரு நல்முத்துக்கள் கயிறதாக
ஏர் பொருந்து பொன் பலகை இலங்கும் ஊஞ்சல்
இனிது ஏறி அமர்ந்திருந்து இசை செய்வாணி
தார் பொருந்து மலர் மகளும் சமரம் வீச
தம் நிகரில் வான் மகளிர் தாழ்ந்து போற்ற
கார் பொருந்து நல்லிகப்பன் வயலில் வாழும்
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்.

2. காவிரிப் பூம் பட்டினத்துக் கரையில் மேவும்
கலம் மருவு துறை நின்று கப்பல் ஏறி
பூவிரியும் பொழில் நிறைந்த புது நாடு எய்தி
புலம் கொழுதல் பண்டங்கள் புகுந்து சாற்றி
நாவிரியும் புகழ் பொருளோடு எய்தும் நாய்கர்
நற்குடியில் வந்து எமக்கு நன்மையே செய்
காவி திகழ் நல்லிகப்பன் வயலில் வாழும்
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்.

3. வளம் மருவும் பெருங்குடி நல் வணிகப் பேர் சேர்
மாநாய்கன் என்பவற்கு மகளே ஆகி
வளம் செறியும் அக்குடியில் வந்தோன் ஆள
மாசாத்துவான் தனக்கு மகனே ஆகி
உளம் மருவு பல கலைகள் உறுதி ஒடு
உணர்ந்து உயர்ந்த கோவலற்கு மனைவி ஆன
களம் செறியும் நல்லிகப்பன் வயலில் வாழும்
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அரிய எனும் கலை ஆகும் ஆடல் பாடல்
அழகு எனும் இம்மூன்று அமைந்த அணங்கு போல்பாள்
பெரிய மலர்க் கண்ணினுள் மாதவிப் பேர்ப்
பெண்ணின் மேல் கொண்ட பெரு வேட்கை ஆலே
கரிய குழல் வளமுலை உன் காதல் சோர்ந்து
காலமெல்லாம் அவளுடனே கழித்த அந்நாள்
உரியது ஒரு மகள் உதிக்க உவப்பே கொண்டான்
உளம் திரியாக் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

5. குலத்தில் உள்ளோர் சேர்த்த நிதிக் குப்பையெல்லாம்
குறைவின்றி ஆங்கு அவட்கே கொடுத்துப் போக்கி
நலம் திகழ் பல்வகை ஆனநகைகள் யாவும்
நாள்தோறும் கொடுத்ததன் பின் நல்க வேண்டி
பொலம் திகழ்உன் கால் ஒன்றின் சிலம்பை ஈயப்
போனபொருள் மீட்பதற்கு இஃது ஆகும் என்றே
கலங்கலுறும் கணவன் உடன் மதுரை சேர்ந்த
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்.

6. சின சமயத் துறவியாம் கவுந்திப் பேர்சேர்
தெய்வ மூதாட்டி யுடன் மதுரைக்கு ஏகி
மனம் நலநல் இடையர்குல ஆய்ச்சியான
மாதரியால் அடைக்கலம் பெற்று அங்கு நின்றே
கன மதுறு காற்சிலம்பை விற்க வேண்டிக்
கண் கவரும் மதுரைநகர்க் கோவலனே தான்
தன வணிகர்தமை நாடிச் சென்ற யாவும்
தவ உணர்ந்த கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

7. துங்க மிகும் மதுரைநகர் வேந்தற்கு ஏய்ந்த
துணைவி காற்சிலம்பு ஒன்று தொலைந்து போக
எங்கெங்கும் தேடிவரும் காலம் மேல் நாள்
இயற்றிய தீவினைப் பயனுனது உந்திப் போக்க
அங்கு செல் கோவலனைக் கள்வன் போல
அரசன் தன் ஆணையினுல் கொலை செய்திட்டான்
பங்கம் உறும் இச்செயல் கேட்டு ஆற்ருய்ஆகிப்
பதை பதைத்த கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

8. கொலைக் களம் போய்க் கணவனுடல் கூட்ட மீண்ட
கோவலன்ருன் உனைத் தேற்றிக் கோக்கே சென்ருன்
உலைக் கனல் போல் தோற்றமுறும் வெகுளி ஓங்க
உறுதுயரம் தாளாது உலகாள்வோன் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைத்து நிற்கும் காவலரால் மன்னன் முன்போய்
வழக்கு ரைத்து மன்னனையும் மாள்வித்தங்கே
நிலைத்து நிற்கும் கற்புடையார் எழுவர் தம்பேர்
நிறுத்தி யுள கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

9. இறைவனையே மட்டு மன்றி இழிந்தோர் வாழும்
எழில் மதுரை தனையு மெரியூட்டி மீண்டே
உறை புனல்சேர் வைகை நதிக் கரையின்ஓரம்
ஓயாது நடந்து வழி சென்று சேரர்
இறைமை செய்யும் வளநாட்டில் எழுந்து நின்ற
எழிற் குன்றின் வேங்கைநிழல் எய்தி நின்றே
மறைவை உறு கணவனுடன் வானிற் சேரும்
மங்கலம் சேர் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்.

10. சேரர் குல மன்னவன் செங்குட்டுவன் தான்
செய்த திருக்கோவிலின் கண் சிலையாய் நின்றே
ஊர் அயரும் விழாவின்கண் உயர்வான் தோன்றி
உறு மொழியும் பல வரமும் உவந்தேஈந்து
நாரலரும் மக்க ளுடை நன்மை நோக்கி
நல்லிகப்பன் வயலின் கண் எழுந்து தோன்றும்
காரமரும் கோயி லினுள் காட்சி ஈயும்
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்.

வாழி விருத்தம்

பருவ மழை தவருது பயின்று வாழி
பசு இனமும் பிறஉயிரும் பரந்து வாழி
உருவமுறும் மக்கள் இனம் உவந்து வாழி
உலகெங்கும் சமய நெறி உயர்ந்து வாழி
திருவுடையோர் செம்மை அறம் சிறந்து வாழி
தெருளுமணத் துறவுடையோர் செறிந்து வாழி
கருதுறு நல் கற்புநெறி கனிந்து வாழி
கண்ணகி எம் அம்மை அருள் நலந்து வாழி.

பண்டிதமணி சு. இராமசாமி
இடைக்காடு

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

ஓம் சக்தி

# புவனேஸ்வரியம்மை திருவூஞ்சல்

## காப்பு

அங்கமல மலர்மடவா ரிருவ ரோடும்
ஆன்றவரு மமரச்சு வேலி நீடுந்
திங்கடவழ் பொழிலிடைக்காட் டொருபால் நாளுந்
திருவளரும் நல்லிகப்பன் வயலில் வாழும்
பொங்குபரை யாதியைந்தா யுலக மீன்ற
புவனநா யகிபுகழ்சே ரூஞ்சல் பாடத்
துங்கமத வைந்துகரத் தொந்தித் தந்தித்
தும்பிமுகர் தம்பதுமத் துணைகாப் பாமே.

## நூல்

மங்கலஞ்சேர் மறைநான்குந் தூண்க ளாக
மந்திரஞ்சே ராகமங்கள் விட்ட மாகத்
தங்குபல ஞானகலை வடங்க ளாகத்
தாரகமா மறைமூலம் பீட மாக
எங்கு மருள் பொங்குமணி யூஞ்சல் மீதே
ஏகநா யகனுடனே யினிது மேவி
அங்கணணி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாட ரூஞ்சல்.

வானமருங் கங்கையினீர் பனிநீர் கூட்டி
வரமமரும் மந்திரப்பொற் கலநீ ராட்டிக்
கானமர்கற் பகக்கனகக் கலன்கள் மாட்டிக்
கவினமர்பூம் பட்டுடுத்திக் கழுநீர் சூட்டி
ஞானமணி விளக்கெடுத்துத் தூபங் காட்டி
நான்மறையந் தணர்பரவ நவைக ளோட்டி
ஆனமரும் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாட ரூஞ்சல்.

திங்களணி வெண்குடையிந் திராணி தாங்கத்
திலோத்தமையும் உருப்பசியுங் கவரி வாங்கத்
துங்கமிகு மாலவட்ட மரம்பை வீசத்
தூயமுனி பன்னியர்க ளாசி பேச
செங்கமலை வெண்கமலை வடந்தொட் டாட்ட
ஜெயமடந்தை யிடைவிலக்கிச் செங்கோல் நீட்ட
அங்கணணி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாட ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாகதம்பிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலதூ ரியமியம்பச் சங்க மேங்க
வானகதுந் துபிமுழங்க மறைக ளோங்க
செங்கைமணி யாழ்தடவி முனிவர் பாடச்
சேயரிக்க ணரம்பையர்கள் நடன மாட
எங்குமர கரவோசை பொலிந்து நீட
இருவினையும் பழமலமு மிரிந்தே யோட
அங்கமலி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாட லூஞ்சல்.

காரணியு மணிக்கண்டத் தெண்டோள் முக்கட்
கங்கையணி சங்கரர்க்குக் காத னல்கும்
ஏரணியு மிருவிழியும் இருளை யோட்டும்
எழிலணியு மிளநகையும் ஞானத் திங்கட்
சீரணியுந் திருமுகமும் வேய்த்தோ ளுங்குந்
திருவடியுஞ் செஞ்சிலம்புந் தெரியக் காட்டி
ஆரணியும் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாட லூஞ்சல்.

உன்னரிய பேரொளியே யமுதே தேனே
ஓங்காரத் துட்பொருளே யுமையே யென்றும்
முன்னரிய நாற்பத்து முக்கோ ணத்துள்
முளைத்தெழுந்த சிவக்கொழுந்தே முதலே யென்றும்
கன்னிகையா யுலகருள்கற் பகமே யென்றும்
கைதொழுது மெய்யடியார் கசிந்து போற்ற
அன்னமலி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாட லூஞ்சல்.

தெண்டிரை நீர்த் தொண்டைமா னூற்றின் பாங்கர்
திருமுருகன் சந்நிதியின் தென்மேல் பாலில்
வண்டிசைக்கக் குயில்பாட மயில்க ளாட
மரகதப்பைங் கிளிபுகலும் வளமார் சோலை
தொண்டரினம் மண்டியுண்டு கண்டம் நீங்கும்
துரியசிவ பரஞானச் சுகவாழ் வீயும்
அண்டர்பணி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாட லூஞ்சல்.

பாதிமதி நதிபொதியும் பரம னேர்பால்
பரதவர விகடநடப் பால னேர்பால்
சோதிவடி வேலுடைய தோன்ற லோர்பால்
சூரவயி ரவனேர்பால் வீர னேர்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதுநிரை துயில்முகுந்தன் பிரமனோர்பால்
முத்தமிழற் புதமறைதேர் முனிவ ரோர்பால்
ஆதுரந்தீர் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

மோனபர ஞானமதி முடியு மாட
முகமதியி னழகாட முறுவ லாடக்
கானமரைங் கணையினொடு கரும்பு மாடக்
கட்கடையி னூறுபரங் கருணை யாடத்
தேனமருங் குவளைநறுந் தெரிய லாடச்
செஞ்சிலம்பு கொஞ்சுதிரு வடியு மாட
ஆனமரும் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

பூவமர்பொன் நாரணியே யாடீ ரூஞ்சல்
புனையருட்பொன் னூரணியே யாடீ ரூஞ்சல்
நாவமர்நல் ஆரணியே யாடீ ரூஞ்சல்
நயமமர்நல் லார்அணியே யாடீ ரூஞ்சல்
சேவமரும் அந்தரியே யாடீ ரூஞ்சல்
தீயவினை வந்தரியே யாடீ ரூஞ்சல்
ஆவமரும் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

❁

பூவாழி பொன்னின்மழை பொழிந்து வாழி
பூசுரரு மைந்தெழுத்தும் பொலிந்து வாழி
தேவாழி தேவர்கடம் பெருமான் வாழி
தெய்வமறை யாகமந்தீந் தமிழும் வாழி
தூவாழுந் தும்பிமுகத் தெம்பி வாழி
சுடரிலைவேற் பரன்வாழி தொண்டர் வாழி
ஆவாழி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியும் வாழி வாழி.

முற்றும்

**தனியன்**

வெண்ணிலவார் திருமுடியும் விழிகள் மூன்றும்
விளங்கிழைசேர் கனதனமும் விறலா னேறும்
உண்ணிகழு மருட்பெருக்கு மிளமை நீங்கா
ஒளியுருவு முயர்மணிப்பொன் னுடையு மோங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிலவு மங்குசபா சத்தி ஞேடே
எழில்வரத மபயமுமா யியைந்த கையும்
பண்ணிலவு பழமறைச்செஞ் சிலம்பு கொஞ்சும்
பாததா மரையுமுளம் பதித்து வாழ்வாம்.

### எச்சரிக்கை

கருவாருயிர் பெருவீடுற நடமாடர ஞெருபால்
வருவாய்நல் லிகப்பன்வயல் வாழ்வே எச்சரிக்கை
ஒன்ருகியொ ரைந்தாய்ப்பினு மொன்பான் வடிவாகி
நின்ருய்நல் லிகப்பன்வயல் நிறைவே எச்சரிக்கை
ஐந்தாயெழுத் தெட்டாய்ப் பின்னு, மாருயிரு கூருய்
வந்தாய்நல் லிகப்பனுறை மணியே எச்சரிக்கை.

### பராக்கு

திருவுமருள் மருவுகலை மகளுமடி பரவ
அருவுமரு வுருவுமுள வம்மே பராக்கு
ஒருகுடிலை சலனமுற இருவிழியி ஞேக்கி
உலகுதரு சலசபத முடையாய் பராக்கு
கரடதட விகடமத கரியிஞெடு நெடுவேல்
கரமணியு முருகையருள் கனியே பராக்கு.

### லாலி

தேவி லாலி சிவகாமி லாலி பரன்
ஆவி லாலி மகமாயி லாலி
ஆதி லாலி யருணீதி லாலி சிவன்
பாதி லாலி பரஞ்சோதி லாலி
மாலி லாலி திரிசூலி லாலி யருள்
பாலி லாலி யெழில் நீலி லாலி.

### மங்களம்

ஆதி புவனேஸ்வரிக்கு மங்களம் — முது
ஆரணங்கள் தோத்திரஞ்செய் யம்பிகைக்கு மங்களம்
பாதியுரு வானவட்கு மங்களம் — நிறை
பத்தர்கட்கு முத்திதரும் பார்ப்பதிக்கு மங்களம்
சோதியுரு வானவட்கு மங்களம் — ஆதி
சொல்லவருள் செய்யுமொரு நல்லவட்கு மங்களம்
நீதியுரு வாமனேக்கு மங்களம் — புகழ்
நிலவுமிடைக் காட்டுவதி யுலகனேக்கு மங்களம்.

முற்றும்

நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

# இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய

## பரிபாலன சபை

தலைவர் : திரு. வே. சுவாமிநாதன்
உப - தலைவர் : திரு. சு. கிருஷ்ணபிள்ளை
செயலாளர் : திரு. ச. க. ஆறுமுகம்
உப - செயலாளர் : திரு. த. கதிரமலை
பொருளாளர் : திரு. சி. கந்தசாமி

## பரிபாலன சபை உறுப்பினர்


1. திரு. பொ. கணபதிப்பிள்ளை
2. திரு. நா. சுவாமிநாதன்
3. திரு. கு. அருணகிரிநாதன்
4. திருமதி அம்பிகாவதி செல்லையா
5. திரு. சி. முருகையா
6. திரு. வ. கணபதிப்பிள்ளை
7. திரு. செ. குலசேகரம்
8. திரு. பொ. பூபாலசிங்கம் (அதிபர், இடைக்காடு மகாவித்தியாலயம்)
9. திரு. வி. சிவபாலன் (தலைவர், இடைக்காடு சன சமூக நிலையம்)
10. திரு. க. தங்கவேல் (தலைவர், இடைக்காடு கலைமகள் சன சமூக நிலையம்)
11. திரு. க. பாலசுப்பிரமணியர் (பூசகர்)
12. திரு. வெ. கந்தசாமி (ஆலய காவலர்)

கௌரவ கணக்குப் பரிசோதகர்:


திரு. சு. இ. கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர், சந்தானகோபாலர், கண்ணகை அம்மன்,
சுப்பிரமணியர் ஆகிய சுற்றுப் பரிவார
ஆலயங்களின் பின்புறத் தோற்றம்



அசையா மணியும் கோபுரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

# நன்றி

திருப்பணி வேலைகள் சிறப்புற நடப்பதற்கு அருள் சுரந்து ஆதரவு நல்கிவரும் அகிலாண்டநாயகியாம் புவனேஸ்வரித் தாயின் பாதக்கமலங்களிற்கு இச்சபை சிரந்தாழ்த்திக் கரங் கூப்பித் திரிகரண சுத்தியோடு வணக்கம் செலுத்துகின்றது.

அம்பாளின் ஆலயம் இவ்வாறு பேரெழிலுடன் உருப்பெற்று விளங்குவதற்கு உறுதுணையாக நின்று உதவிகள்பல நல்கிய மெய்யடியார்கள் நாம் வழங்கும் நன்றியை எதிர்பார்ப்பவர்களல்லர். தேவியின் திருவருளைப் பெற்று இகபர சுகங்களை ஒருங்கே அடைய விரும்பியே இத்தர்ம கைங்கரியத்தில் ஈடுபட்டார்கள். எனவே நாம் வழங்கும் நன்றிகள் அன்னாருக்கு வெறுப்பாக இருக்குமேயன்றி விருப்பாயிருக்கமாட்டா. இருந்தும் இச்சபை உபசாரத்துக்காகவேனும் நன்றி நவிலல் என்னும் இப்பணியை மேற்கொண்டு தனது மகிழ்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்த அவாவுகின்றது.

இடைக்காடு என்னும் இணையற்ற இப்பதியில் வதியும் சைவ நன்மக்கள் திருப்பணி வேலைகளிலும், தேவிக்கு நடைபெறும் நித்திய நைமித்திய பூசைகளிலும் பெரும்பங்கு ஏற்று வருகின்றார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தி அவர்களுக்கு முதற்கண் எமது உளம் நிறைந்த நன்றிப் பெருக்கையும், நல்வாழ்த்துக்களையும் வாரி வழங்குகின்றோம்.

இத்திருப்பணி வேலைகளுக்குப் பணமாகவும் பொருளாகவும் வாரி வழக்கியதோடமையாது சிரமதானப்பணிகளிலும் ஈடுபட்டனர் பலர். இவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரியது.

உள்ளூர் வெளியூர்களில் உள்ளவர் மாத்திரமன்றி வெளிநாடுகளில் உள்ளவர்களும் இத்திருப்பணிக்குத் தாராளமனத்தோடு நிதியுதவி புரிந்துள்ளார்கள். இவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றி.

திருப்பணி வேலைகளுக்குரிய கல், மண், சீமேந்து, மரம், முதலியவற்றை ஏற்றுவதற்கு வாகனங்கள் உதவியவர்களுக்கும் அம்பாளின் திருவுலாவின் போது வாகனங்கள் உதவியவர்களுக்கும் உள்வீதி, புறவீதி, பிரதானவீதி அமைத்த தொண்டர்களுக்கும், சன சமூக நிலையங்களுக்கும் பாடசாலைக்கும் எமது ஆழ்ந்த நன்றி.

பரிவாரமூர்த்திகளுக்கு ஆலயங்கள் எடுப்பதற்குத் தனித்தனி பொறுப்பேற்று நிதி உதவிய அன்பாளர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றி.

மின்சாரயந்திரம், ஒலிபெருக்கி என்பவற்றை வாங்குவதற்கு உதவி செய்தவர்களுக்கும் எமது பெருநன்றி உரியது.

ஆலயக் கட்டிட வேலைகளையும், விக்கிரகங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் போன்றவற்றையும் மிக அழகாக உரியகாலத்துக்கு முன் நிறைவேற்றித் தந்த ஸ்தபதிகள், கட்டிடக்கலைஞர்கள், சிற்பிகள், ஓவியர்கள் வர்ணந்தீட்டுபவர்கள் ஆகிய சகல கலைஞர்களுக்கும் எமது தலையாய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் மின்னொளி அமைப்பை நவீன முறையில் அமைத்துத் தந்த மின் இணைப்பாளர்களுக்கும், எல்லா ஆலயங்களுக்கும் பளிங்குக் கற்கள் அமைத்துத் தந்த மேஸ்திரிகளுக்கும், ஏனைய கட்டிட நிலவேலைகளை அமைத்துத் தந்த உள்ளூர் மேஸ்திரிகளுக்கும், மர வேலைகள் இரும்பு வேலைகள் என்பவற்றை திறம்பட அமைத்து உதவிய விற்பன்னர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி உரியது.

கும்பாபிஷேகத்துக்குரிய யாகமண்டபத்தை அழகுற அமைப்பதற்கு உறுதுணையாக நின்ற இளைஞர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கும் எமது ஆழ்ந்த நன்றி உரியது.

ஆலயம் அமைப்பதற்கு ஆரம்ப காலந்தொடக்கம் சகல அறிவுரைகளையும் வழங்கி கும்பாபிஷேகத்தைத் தலைமை தாங்கி நடத்திய பிரதம சிவாச்சாரியாருக்கும் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட ஏனைய சிவாச்சாரியர்கள், சந்தானுசிரியர்கள் முதலானோருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கும் கடப்பாடு உடையோம்.

எல்லா மூர்த்திகளுக்கும் தினமும் சாத்துவதற்கு அழகிய மலர் மாலைகள் தொடுத்து உதவிய சிறுர்களுக்கும், தினமும் அம்பாள் எழுந்தருளி வீதி வலம் வருவதற்கு எல்லா உதவிகளையும் வழங்கிய தொண்டர்களுக்கும், கூட்டுப் பிரார்த்தனை நடத்திய பக்தர்களுக்கும், தினமும் நடைபெற வேண்டிய மண்டலாபிஷேகங்களைப் பொறுப்பேற்று திறம்பட நடாத்திய உபயகாரர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைக் கூறுகின்றோம்.

எழுந்தருளும் உற்சவ மூர்த்திக்குத் தினமும் அழகிய மலர் மாலைகளால் எழிலுறு சாத்துப்படி அமைத்த குருமார்கள், பூசகர்கள் முதலானோருக்கும், மங்கள இசை பரப்பிய தவில், நாதஸ்வரக் கலைஞர்களுக்கும் கூட்டுப் பிரார்த்தனையில் பங்குபெறுவதற்காக ஏழாலை, கட்டுவன், பத்தமேனி, தொண்டைமானுறு போன்ற கிராமங்களிலிருந்து வருகை தந்த பக்தர்களுக்கும், ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய பேரறிஞர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றி உரியது.

இளஞ்சந்ததியினருக்கு அழகிய மலர் மாலைகளை தொடுப்பதற்குப் பயிற்சி அளித்த ஆசிரியைக்கும் எமது நன்றி உரியது.

தாபன ரீதியிலே இடைக்காடு இந்து நெறிக்கழகம் ஆற்றிவரும் ஆலய சேவை, ஆன்மீகப் பணி ஆகியவை பொன்னெழுத்துகளாலே பொறித்துப் போற்ற வேண்டியவை. ஊர் மக்களையும் இளந்தலைமுறையினரையும் சிவதொண்டு, சமய வாழ்க்கை என்ற நெறியில் ஒருமுகப்பட்டு ஒத்துழைக்க வழி சமைத்தும் சிறப்பாக சமய தீட்சை செய்வித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசமாக நித்திய கருமவிதி நூல்கள் விபூதி பக்கட்டுக்கள் வழங்கியும், திருவிளக்கு வழிபாட்டை ஊக்குவித்தும், கூட்டுப்பிரார்த்தனை பஞ்சபுராணம் பாடுதல், மலர் கொய்தல், மாலை தொடுத்தல் ஆகிய பணிகளைப் பயில்வித்தும், அபிராமி அந்தாதி, நவக்கிரக தோத்திரம், நித்திய கருமவியல், திருவிளக்கு வழிபாடு ஆகிய நூல்களை அச்சிட்டு வெளியிடுவித்தும், மாணவர்கள் இவற்றை மனனஞ்செய்து போட்டிப் பரீட்சையில் கலந்து பரிசுபெற ஊக்கியும், ஆலயத்தின் மண்டலாபிஷேக காலத்தில் கேளிக்கை மறந்து பெரியார்களின் ஆன்மீக அறிவுரைகளைக் கேட்கக் கூடியதாகச் சொற்பொழிவுகள் நிகழ்வித்தும் வருகின்றனர். தமிழ் வேதமாகிய குறள்,

'ஒல்லும் வாயெல்லாம் அறவினை ஓவாதே
'செல்லும் வாயெல்லாம் செயல்'

எனச் சொல்லிவைத்த இலக்கணத்திற்கு இலக்கியமாகிறது இச் செயல்கள். இச் செயலால் நல்லார் சிலராயினும் ஏன் பலரே உருவாகிவிடுவராயின்,

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

நாடும் மக்களும் நலம் பெற இம்மன்றம் காலமெல்லாம் கைமாறு கருதாத கடமையைத் தொடர்ந்து செய்து வளர்ந்து நறுநிழல் தருக, நறுங்கனி தருக.

ஆடவல்லான் தூக்கிய அடி குஞ்சிதபாதம். அது அம்பிகையின் பாதமலர். அப்பாத கமல மலர் நிழலே பாதக மலமறுத்த பசுக்குலம் சென்றடையும் பரமபதம். அப்பேற்றை அடைய அநுதினமும் அயராது அடித்தொண்டு பூண்டொழுகும் அடியார் குடிகள் வாழையடி வாழையாக வாழ்க. அடியார் தம் அடியார்க்கும் நாமும் அடியோமாக ஒழுகி உய்தி பெற அன்னை புவனேஸ்வரி கடைக்கண் அருள் பொழிய வேண்டுகிறோம்.

இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய ஆன்மீகத்தலைவர்களுக்கும் கவிதைகள் கட்டுரைகள் தந்துதவிய அறிஞர்களுக்கும் இம்மலரை உரியகாலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இங்கே குழுமுறையாகவும் தனித்தனி விதந்தும் நன்றி கூறப்பட்டவர்களேயன்றி இலைமறை காய்போல இருந்து பணியாற்றும் பண்பாளரும் பலருளர். அவர்களுக்கும் நன்றி செலுத்துவது நம் கடன்.

வாழ்கின்றாய் வாழி– மனமே; அவ் வாணிதிரு
சூழ்கின்றார் சுந்தரிதாள்; தோகை புவனேசை யருள்
ஆழ்கின்றாய்; ஆழாய் இனிப் பிறவி; அவ்வீட்டில்
வாழ்கின்றாய்; வைப்பள் இடைக்காட்டுடையாள் வாய்மையே.

சுபம்

திரு. ச. க. ஆறுமுகம்
செயலாளர்
ஆலய பரிபாலன சபை




மஹாத்மா அச்சகம், ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org